Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 29 புதன்கிழமை (12.06.2013) பக்கங்கள் 20 ஓசை – 255
















# இலங்கை விவகாரங்களை கையாள விசேட தூதுவரை நியமிக்க முடிவு

## புதுடில்லியின் அதிரடி

(புதுடில்லி)

இலங்கை தொடர்பான விவகாரங்கள் அனைத்தையும் இராஜதந்திர ரீதியில் வினைத்திறனுடன் கையாள்வதற்கு வசதியாக மூத்த ராஜதந்திரி ஒருவரை விசேட தூதுவராக நியமிப்பதற்கு இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது. குறிப்பாக இந்திய - இலங்கை உடன்படிக்கையின் தொடர்ச்சியாக இலங்கை இனப்பிரச்சினையில் அதிகம் பரீட்சயம் உள்ள மூத்த இராஜதந்திரி ஒருவரையே விசேட தூதுவராக நியமிப்பதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

13 ஆவது அரசியல் திருத்தச்சட்டத்தை திருத்துவது தொடர்பாக இலங்கை அரசியல் வட்டாரங்களில் இப்போது கிளம்பியிருக்கும் சர்ச்சை குறித்து இந்திய அரசு தனது கவனத்தைத் திருப்பியிருக்கிறது. 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சில அதிகாரங்களை நீக்க இலங்கை அரசாங்கம் தீர் மானித்திருப்பதன் மூலம் 1987 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையில் ஒருதலைப்பட்ச மீறல் இடம்பெறுதாகக் கூறி, அது

19 ஆம் பக்கம் பார்க்க




## படையினர் 50 பேர் மயக்கம் உணவு நஞ்சானதால் விபரீதம்

ஹிங்குரக்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 223 ஆம் படைப்பிரிவு முகாமைச் சேர்ந்த படையினரில் 50 பேர் திடீர் மயக்கமடைந்து சுகவீனமுற்ற நிலையில் ஹிங்குரக்கொட மற்றும் பொலன்நறுவ வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் உட்கொண்ட உணவு விஷமானதன் காரணமாகவே திடீர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வடக்கில் உதவி ஆசிரியர்களாக 539 பேருக்கு யூலையில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பணியாற்றும் 539 தொண்டர் ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர். வடமராட்சி கிழக்கு தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் தமது நியமனம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்றைய தினம் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## ரணில் விக்கிரமசிங்க மீது கிராமவாசிகள் திரண்டு கல்வீச்சு

(கொழும்பு)

தென்னிலங்கை கிராமம் ஒன்றில் நிகழ்ந்த மரண வீட்டுக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குழுவினர் மீது கிராமவாசிகள் திரண்டு கல்வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவியைப் பதம்பார்த்த ஆசிரியர் விவகாரம் இப்போது பூதாகரம்

### மனித உரிமை ஆணைக்குழு விசாரிக்கும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவி ஒருவர் ஆசிரியர் ஒருவரினால் தடியினால் தாக்குதலுக்குள்ளாகிய சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயம் விசாரிக்கும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில கிளிநொச்சி செல்வாநகரைச் சேர்ந்த நல்லதம்பி பிறையரசி (வயது-12) என்ற தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவி பாதிக்கப்பட்டிருந்தார்.

அரச நிறுவனங்களில் நடைபெறும் மனித உரிமை மீறல் விடயங்களைக் கையாளும் அரச அமைப்பு என்ற வகையில் ஊடகங்கள் வாயிலாக வெளிவந்த இந்தச் சம்பவம் குறித்து

19 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர்களுக்கு கட்டாய காப்புறுதி புதிய செயற்திட்டம் விரைவில்

மீன்பிடிப் படகுகளுக்கு இனி தரச்சான்றிதழ் வழங்கும் புதிய செயற்திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. அத்துடன் அனைத்து மீனவர்களுக்கும் கட்டாயக் காப்புறுதித்திட்டமும் அமுல்செய்யப் படவுள்ளது. இவ்வாறு மீன்பிடி

19 ஆம் பக்கம் பார்க்க

பொருத்தமான தொழில் தகைமை இல்லாமல் வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்க முடியாது!

இதோ உங்களுக்காக நாம் தரும்
UK, Australia, Canada, Malaysia, Singapore என
விரும்பிய நாட்டுக்குச் சென்று பணம் சம்பாதிப்பதற்கான

வருமானத்துடன் கூடிய
தொழிற்பயிற்சி & தொழில்வாய்ப்பு
[உணவு, தங்குமிட வசதி இலவசம்]



3 in 1

City & Guilds · aets · UEL University of East London · SkillsMalaysia INVITE

- பயிற்சிக் காலத்தில் 50,000 ரூபா வருமானம்
- பயிற்சி நிறைவில் UK, Australia, Malaysia சர்வதேச தரச் சான்றிதழ்கள்
- பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தபின் Work Permit உடன் வேலைவாய்ப்பு
- UK, Australia, Canada என விரும்பிய நாட்டில் சட்டபூர்வமாக வாழும் வாய்ப்பு

IELTS, வங்கிப்பண வைப்பு
தூதரக நேர்முகத் தேர்வு } அவசியமில்லை
யாழ்ப்பாணத்திலேயே விசாவைப் பெற்று உடனே பயணிக்கலாம்!

வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெற
ஜூன் 15 சனி ▸▸ யாழ்ப்பாணம் ஜூன் 16 ஞாயிறு ▸▸ வவுனியா
ஜூன் 17 திங்கள் ▸▸ கிளிநொச்சி ஜூன் 18 செவ்வாய் ▸▸ மீண்டும் யாழ்ப்பாணம்

பிரவேசம் இலவசம் முற்பதிவுகளுக்கு: 077 36 16 798
இதுவரை 3 அணிகளாக 30க்கு மேற்பட்ட மாணவர்கள் பயணமாகியுள்ளனர்

வெளிநாடு செல்லும் வசதியில்லாத மாணவர்களுக்கு உள்நாட்டு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சிகரம் தொழில் வழிகாட்டல் ஆலோசனை முற்றிலும் இலவசம்!

சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk
(C/2830)

# கொடிகாமத்தில் கடத்தப்பட்ட ஆட்டோ
## யாழ்.ஒட்டுமடம் பகுதியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை கடத்திச் செல்லப்பட்ட முச்சக்கரவண்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒட்டுமடம் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் யாழ்.குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி விக்கிரமராட்சி இது குறித்து தகவல் தருகையில்,

அண்மையில் கொடிகாமம் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி அங்கிருந்து கடத்தப்பட்டு காணமற் போயிருந்ததாகவும், இது குறித்து சந்தேக நபர் கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் முச்சக்கரவண்டி ஒன்று ஒட்டுமடம் சந்தியில் கைவிடப்பட்டிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருந்ததாகவும், இதனை அடுத்து குறித்த பகுதிக்குச் சென்று முச்சக்கர வண்டியை மீட்டதாகவும், இதன் பின்னர் அது கொடிகாமம் பகுதியில் காணாமற் போயிருந்தது என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அதனை கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார் (பா)

# சுன்னாகம் லயன்ஸ் கழக புதிய நிர்வாக பதவியேற்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக பதவியேற்பு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தியோலை, மயிலணி, சுன்னாகத்தில் அமைந்துள்ள லயன் சி.ஹரிகரன் வாசஸ்தலத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.தேவராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப்பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ (J.P), லயன் டில் காணி ரஞ்சித் பெர்னாண்டோ தம்பதி களும் சிறப்பு விருந்தினராக, மாவட்ட நிர்வாகச் செயலாளர் (வடக்கு) லயன் ஆர்.ஜெயபாலன் (MJF) மாவட்ட நிர்வாகப்பொருளாளர் (வடக்கு), ரி.அன்பானந்தன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

கழகத்தின் புதிய தலைவராக வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரனும், செயலாளராக லயன் சி.கஜனும், பொருளாளராக தொழிலதிபர் லயன் சண்முகவேல், (ஜே.பி)யும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

தொடர்ந்து புதிய தலைவர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெறும் இரண்டாவது அமர்வில் உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு 2012 ஆம்ஆண்டு தோற்றி அதியுயர் பெறுபேறுகளைப் (9ஏ, 8ஏ) பெற்ற உடு வில் மகளிர் கல்லூரியின் 6 மாணவிகளும், இராமநாதன் கல்லூரியின் ஒரு மாணவியும், ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் ஒரு மாணவியுமாக 8 மாணவிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் 2012 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரீட்சையில் உடுவில் கல்விக் கோட்டத்தில் சித்தியடைந்து அந்தக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளிலே தொடர்ந்தும் சிரேஷ்ட கல்வியை மேற்கொண்டுவருகின்ற 25 மாணவர்களுக்கு லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பெர்னாண்டோவின் நிதியிலிருந்து ஒரு சிறுதொகைப் பணம் அன்பளிப்பாக வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் பாண்ட் வாத்தியக் குழுவினரும் பாடசாலை உபகரணங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். புதிய செயலாளர் லயன் சி.கஜனின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவடையும்.

# வயோதிபப் பெண்ணின் மரணம்; இருவர் பொலிஸாரல் கைது

(வடமராட்சி)

ஊறணியில் வயோதிபப் பெண்ணின் மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மரணமடைந்த மேற்படி வயோதிபப்பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (J,J6)


**சிறு விளம்பரம்**

சுதுமலை தெற்கில் சகல வசதிகளும் கெண்ட ஒரு வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: மு.சீவறட்ணம் (சிவராசா), சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/189)




இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளைக்கான நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றபோது நிகழ்வில் கலந்து கொண்ட தேச மானிய ஜெயசங்கர் மற்றும் ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் உட்பட ஏனைய பொதுச் சபை உறுப்பினர்களையும் காணலாம்.

# வித்தியாலய திறப்பு விழா

யா/வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை அரசால் ஒதுக்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்து திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை முதல்வர் வை.விஜயகுமாரன் தலைமையில் காலை 9 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகியது.

நிகழ்விற்கு தென்மராட்சி கல்வி வலய முதன்மை ஆசிரியர் அ.மனோரஞ்சிதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பாடசாலையில் புதிதாக சரஸ்வதி சிலை அமைக்கப்பட்டு சைவத் தொண்டர் க.இராசையா சிலையை திறந்து வைத்தார்.

பாடசாலையில் பொருத்தப்பட்ட மோட்டார் அண்மையில் திருடர்களால் திருடிச் செல்லப்பட்ட நிலையில் தற்போது க.ஞானபாஸ்கரன் என்பவரால் மோட்டார் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (150)

# மாகாண மட்டத்தில் தேறாங்கண்டல் மாணவன்

மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டியில் தேறாங்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவன் இரண்டாமிடம் பெற்றுள்ளார்.

துணுக்காய் தேறாங்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 6 இல் கல்வி கற்கும் செல்வன் பிரபாகரன் இனியவன் இப்போட்டியில் வெற்றியீட்டியுள்ளார்.

அண்மையில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியில் 'தனி இசை' பிரிவு 2 இல் இவர் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.


AVAILABLE

PHARMACIST REGISTERED AVAILABLE

தொடர்பு. கே.சீவறட்ணம் சுதுமலை தெற்கு மானிப்பாய். (R/189)



# ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 963 | திகதி 10.06.2013

வெற்றி எண்கள்: 03 21 27 47 | ஆங்கில எழுத்து: Z

ஜக்பொட் பரிசு ரூ. 13,821,040/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 13,821,040/= | ரூ. |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 500,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 266 | 1,000/= | ரூ. 266,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 494 | 1,000/= | ரூ. 494,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11951 | 60/= | ரூ. 717,060/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6103 | 40/= | ரூ. 244,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155361 | 20/= | ரூ. 3,107,220/= |
| ஆங்கில எழுத்து | 22551 | 20/= | ரூ. 451,020/= |
| | | மொத்தம் ரூ. | 6,779,420/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அநுராதபுரம் | 604291606-5-35 |
| குருநாகல் | 604281543-1-31 |
| பொலன்னறுவை | 604293218-1-01 |
| கம்பஹா | 604290018-1-41 |
| கொழும்பு | 604291385-5-25 |
| மட்டக்களப்பு | 604290571-0-30 |
| கம்பஹா | 604294419-0-40 |
| மொனராகலை | 604280161-4-14 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,179,420/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 14,125,100/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.06.13 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/2831)





புத்துவெட்டுவான்

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஆனிப்பொங்கல் விழா விஞ்ஞாபனம்-2013

மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான விஜய வருடம் 03ம் நாள் 2013.06.17 திங்கட்கிழமை காலை முதல் மறுநாள் வரை வருடாந்த பொங்கல் உற்சவம் நடைபெற அம்பாளின் திருவருள் கூடியுள்ளது.

நிகழ்ச்சி நிரல்-

2013.06.17 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குப் பிள்ளையார் வழிபாட்டு வைபவம் விசேட பூஜை, அபிஷேக வைபவங்களுடன் ஆரம்பமாகும்.

நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்ற வைபவம் இடம்பெறும்.தொடர்ந்து மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்.

மாலை 6.00 மணிக்கு பண்டம் எடுக்கும் வைபவம் இடம்பெறும்.

இரவு 7.00 மணிமுதல் விசேட நிகழ்வாக காவடி, பாற்செம்பு கற்பூரச்சட்டி, பறவைக்காவடி என்பன இடம்பெறும்.

அதிகாலை 4.00 மணிக்கு தீக்காவடி நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து 2013.06.18 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு வேள்வி இடம்பெறும்.


இங்ஙனம்

ஆலய பரிபாலன சபையினர்

விளம்பர அனுசரணை-திஷான் ஸ்ரோர்ஸ்

புத்துவெட்டுவான், மாங்குளம்.

(C/2832)



ஜெயசீலனின் "எழுதாத ஒரு கவிதை" நூல் வெளியீட்டு விழா நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தெல்லிப்பளைதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகன் உரையாற்றுவதையும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நூலை வெளியிட, யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும், கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (10)

# இலங்கையில் கல்வி வளர்ச்சியில் வடமாகாணமே முதல்நிலை

## வடமாகாண ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

நாட்டின் ஏனைய மாவட்டங்களைவிட வடமாகாணமே கல்வி முயற்சியில் முன்னிற்பதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யாழ். கல்வி வலய கலாசார விழாவிலும்விருது வழங்கும் விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணம் கல்வி வளர்ச்சியில் முன்னிற்கின்றது என்ற செய்தியை அண்மையில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தம்மிடம் தெரிவித்ததாகவும் தெரிவித்ததுடன் ஜனாதிபதியும் கல்வியமைச்சரும் பாராட்டுமளவிற்கு வடமாகாணம் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் வளர்ச்சி கண்டு வருவது இங்குள்ள ஒட்டுமொத்த கல்விச் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் விரைவில் ஒவ்வொரு தேசிய பாடசாலைகள் ஜனாதிபதி அவர்களின் பணிப்புரைக்கமைய உருவாக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்ததுடன் எதிர்வரும் 15 ஆம் திகதி பாடசாலைகளில் மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டத்தையும் ஜனாதிபதியின் வடமாகாணத்தில் ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இத்திட்டம் பின்னர் விரைவாகவே வடமாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைககளிலும் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதி கிளிநொச்சி வரும் ஜனாதிபதி ஏ-9 வீதியைத் திறந்து வைத்து அதனைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கவுள்ளதாகவும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். கல்வி வலயத்தில் தேசியப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறற மாணவர்களின் சிறந்த பெறுபேறுகளைப் பெற உதவிய ஆசிரியர்கள், சிறந்த கல்வி வளர்ச்சியில் முன்னிற்கும் பாடசாலைகளுக்கான விருதுகளையும் ஆளுநர் வழங்கிக் கௌரவித்தார்.

யாழ். வலயத்தில் வேம்படி மகளிர் கல்லூரி தேசியப் பரீட்சைப் பெறுபேறுகளில் முதலாம் நிலையிலும் யாழ். இந்து இரண்டாம் நிலையிலும் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(பா)


வரம் எமக்கு தாருமையா கந்தா!



நற்றமிழ் இசை தந்து
நானிலமும் போற்றிக் காத்தவனே - முருகன்
வள்ளி மனமுடைத்து - தன்
வலக்காலில் வைத்தவனே!
கள்ளமில்லா மனதோடு - சூரன்
களமாடி வென்றவனே!
வானில் சேவல் கொடியாய்யும் - தன்
வாகனமாய் மயிலைகொண்டவனே!
வருங்காலமாவது வசந்தமாகி வர
வரம் எமக்கு தாருமையா கந்தா!

பொலிகண்டி கல்யாண வேலவன் ஆலய மஹோற்சவத்தில் 4 ஆம் திருவிழா இன்றாகும்.

பொலிகையூர்
கே.விசிந்தன்


# 20 இலட்சம் ரூபா பண மோசடி நபர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி 20 இலட்சம் ரூபா பணம் மோசடி செய்த நபரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர். யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அதேயிடத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை வெளிநாட்டிற்கு அனுப்புவதாக கூறி 20 இலட்சம் ரூபாவை ஏமாற்றியுள்ளார்.

ஏமாற்றப்பட்ட பெண் யாழ். பொலிஸ் நிலையத்தல் முறைப்பாடு பதிவு செய்ததை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட கணவன் மனைவி யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டனர்.

விசாரணையின் போது, குறித்த கணவன் மனைவி இருவரும் தமது உறவினர் ஒருவருக்கு பொறுப்பு நின்று 20 இலட்சம் ரூபா பணம் வாங்கி கொடுத்துள்ளனர்.

வெளிநாட்டிற்கு பணம் வாங்கி கொடுத்த நபர் தொடர்பான விபரங்கள் தமக்கு தெரியாது என பொலிஸாருக்கு தெரிவித்ததை தொடர்ந்து பொலிஸார் பொறுப்பு நின்ற நபரை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் பணம் வாங்கி கொடுத்தவர் தொடர்பான விபரங்களை பொலிஸாருக்கு தெரிவிக்கும் வரையில் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளவுள்ளனர். விசாரணையின் பின்னர் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் கூறினார்.

அத்துடன், பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது சட்டத்தரணி ஊடாக எழுத்து மூலம் பணத்தினை கொடுக்கல் வாங்கல் செய்யுமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தினம் சுமார் 50 ற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பண கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கிடைக்கின்றதாகவும், பண கொடுக்கல் வாங்கல்களில் விழிப்புடன் செயற்படுமாறும் யாழ். பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (25)

# இலங்கை வங்கிக்கிளை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி வட்டுக்கோட்டை கிளை அங்குரார்ப்பண வைபவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் வட்டுக்கோட்டை இலங்கை வங்கி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் ஜி.சகாதேவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விற்பனை நெறிப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் எச்.எம்.முதியான்சே, சிறப்பு விருந்தினராக வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ரி.எம்.ரி.தென்னக்கோன், சங்கானைப் பிரதேச செயலர் ஏ.சோதிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் றோயல் ஏ.விமலேந்திரன், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அதிபர் எஸ்.என்.சுபாரட்ண சிங்கி ஆகியோரும்கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

(குருநகர்)

பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதிய யாழ். மாவட்ட சங்கத்தின் நான்காவது ஆண்டு பொதுக் கூட்டம் கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் தவிசாளர் வீ.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கொழும்பு நம்பிக்கை நிதிய பிரதம செயலாளர் ஆரியவிதான பத்திரன பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றினார்.

நடப்பு வருட நிர்வாகிகளாக கீழ்க்காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ஸ்ரீசக்திவேல், உபதலைவராக வி.எஸ்.வீரசிங்கம், செயலாளராக ப.மகேந்திரதாசன், உப செயலாளராக றொ.மகேஸ்நாதன், பொருளாளராக எஸ்.கணேசலிங்கம், கணக்காய்வாளராக மா.புவனேந்திரன், நிர்வாகசபை உறுப்பினர்களாக எஸ்சிவலோகநாதன் மற்றும் க. கணேசவேல் ஆகியோர் தெரிவாகினர். (68)

# சிறப்புற நடைபெற்ற சாரணியப் பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் சாரணர் குழுத்தலைவர் அமரர் வீ.ஜெகதீஸ்வரன் ஞாபார்த்த சாரணியப்பாசறை நிகழ்வு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் சாரணர் குழுத்தலைவர் எஸ் ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்விற்கு மத்தியகல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் பிரதி அதிபர் பி.பாலபவன் சாரணர்குழுத்தலைவர் ப.ஜனராஜ் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

சாரணியப்பாசறை மற்றும் சின்னம் சூட்டும் நிகழ்விற்கு சாரணிய மாவட்ட ஆணையாளர் எஸ்.தேவரஞ்சன் உதவி மாவட்ட ஆணையாளர் துஸ்யந்தன் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாசறை நிகழ்வில் தீப்பாசறை சாரணியப்பயிற்சி நெறி பாசறை அமைத்தல் அணி நடைப் பயிற்சி உணவு தயாரிதல் நாடகம் பாடல் கலை நிகழ்வுகள் போன்றன இடம் பெற்றன.

சின்னம் சூட்டும் நிகழ்வில் மாவட்ட ஆணையாளர் எஸ்.தேவரஞ்சன் உதவி மாட்ட ஆணையாளர் துஸ்யந்தன் ஆகியோரின் வழிநடத்தலில் மத்திய கல்லூரியின் சாரணியக் குழுத் தவைர்களான எஸ்.ஜெயகாந்தன் ப.ஜனராஜ் ஆகியோர் சின்னங்களை அணிந்து வைக்க கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் பட்டிகளை அணிந்து வைத்தார்.

இப்பாசறை நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் சாரணியம் சார் சிறப்பான பயிற்சிகளினை பெற்றுக் கொண்டுள்ளதுடன் புதிய அனுபவங்களையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இச்சாரணியப் பயிற்சிப்பட்டறை நிகழ்வில் 65 மாணவர்கள் கலந்து பயிற்சிகளையும் அனுபவங்களையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தீர்வைத் தள்ளிப்போடும் ஏமாற்று!

எங்கள் கஷ்டங்கள் தீர வேண்டுமென்றால், சுதந்திரமாக நாம் உலவ, விரும்பிய தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ள, கல்வி கற்க, மற்றைய சமூகங்களோடு நாமும் சமமானவர்கள் என்றுணர, அரசியலுரிமைகளைப் பெற்றுக்கொள்ள அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று எண்ணுகிறோம். அதற்குரிய தீர்வொன்று வந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

முதலில், இந்த நாட்டில் உள்ள ஏனைய சமூகங்களான சிங்கள, முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வாழ தமிழர்களாகிய நாம் அதற்குரிய மனத்தயாரிப்புடன் இருக்கிறோமா? அல்லது இப்போதும் எண்பதுகளில் காசி, வண்ணை மேடைகளில் சொல்லியது போல "அவர்கள் வேறு நாங்கள் வேறு" என்ற மனநிலையை மாற்றிக் கொள்ளாமலேதான் உள்ளோமா என்று நம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சிங்கள முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வாழும் எண்ணத்தைக் கொண்டிருந்தால் தான் அவர்களுடன் என்ன பேசுவது என்பதைப் புரிந்து கொள்வோம். அவர்களுடன்தான் பேச வேண்டும் என்பதையும் புரிந்து கொள்வோம். மாறாக, அவர்கள் வேறு நாங்கள் வேறு என்ற முப்பதாண்டுகளுக்கு முந்திய மனநிலையுடன் எந்தப் பேச்சும் சரிவரப் போவதில்லை.

அதனால்தான் அனைத்துக் கட்சிகளையும் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் போய்ப் பேசுவதை மறுத்து அதில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று வாய்பாடு போலச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நடைமுறைச் சாத்தியமான கோரிக்கைகளோடு பேசினால் தீர்வு வந்துவிடும்; தீர்வு வந்துவிட்டால் இருக்கும் அதிகாரங்களைக் கொண்டு மக்களுக்கு வசதி வாய்ப்புகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

கூட்டமைப்பினர் உள்ளாட்சி சபைகளை நடத்தும் லட்சணத்தைப் பார்த்தாலே தெரிந்துவிடும், இருக்கும் வசதிகளைப் பாவித்து, மக்களின் இன்னல்களைப் போக்குவதற்கான எந்தச் சிந்தனையும் முயற்சிகளும் இவர்களிடத்தில் இல்லை. அடுத்த தேர்தலுக்கு மக்களை மயக்கத் தேவையான உணர்ச்சிகரக் கோஷங்களுக்கான குற்றச்சாட்டுப் பட்டியலே அவர்களது தேவை. ஆகவேதான் தீர்வு முயற்சிகளில் அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டுத் தப்பும் தந்திரோபாயமே கூட்டமைப்பின் ஒரே அரசியலாகத் தொடர்கிறது.

நிலம் போகிறது, கலாசாரம் அழிகிறது, ஆமி நம் காணிகளைக் களவாடப் போகிறது, அபிவிருத்தி நடக்கவில்லை என்று அவ்வப்போது சில பிலாக்கணங்களை எடுத்து வீசிவிட்டு, தங்கள் சொந்த அலுவல்களைக் கவனிப்பதில் மும்முரமாகி விடுகிறார்கள். தடுத்து வைக்கப்பட்டிருப்போர், மீள்குடியேற வேண்டியோர் தொகையெல்லாம் வெகு கணிசமாகக் குறைந்து விட்டதால், அவர்களைக் குறித்த வசனங்களுக்குப் பதில் இப்போது வேறு வீரவசனங்களுடன் தொடர்கிறது "தமிழ்மக்களா கொக்கா" உணர்ச்சியூட்டும் நாடகம்.

இவர்களுக்குப் பேச்சும் சரிவராது; மக்களிடம் இறங்கிப் போதல், ஒன்றுதிரட்டுதல், ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபடுத்துதல்... எதுவும் செய்வதற்கு இதுவரை கண்டுவரும் கதிரைச் சொகுசு விடாது. வரும் அரசாங்கங்களை எல்லாம் வெறும் பிலாக்கணத்தால் வீழ்த்தும் முயற்சியிலேயே, அந்தப் போலி நம்பிக்கையிலேயே மக்களை தங்கள் கஷ்டங்களையெல்லாம் சகித்தபடி தேர்தலுக்குத் தேர்தல் வாக்குப் போடவைத்துக் கொண்டிருக்கலாம் என்பதே ஒரே ஏமாற்றாகத் தொடர்கிறது?

இதற்கு மேலும் மௌனம் சாதித்து நம்மை இன்னுமின்னும் கீழ் படிகளுக்குக் கொண்டுசெல்ல படித்தவர்கள், விவரமறிந்தவர்கள் துணைபோகக் கூடாது. யதார்த்தம் என்ன என்பது மக்களுக்கு அறியத்தரப்பட வேண்டும், விவாதிக்கப்படவும் வேண்டும்.

இந்த நாட்டுக்குள் நாம் யார்யாருடன் சேர்ந்து வாழப் போகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்கள் எல்லோருடனுமான உரையாடல்கள் திறக்கப்பட வேண்டும். - ஆசிரியர்

# மாகாண சபைகளூடான சேவைகள் குறித்து பொதுமக்களே தீர்மானிக்கட்டும்

## ஜனாதிபதியின் செயலாளர்

(கொழும்பு)

மக்களின் விருப்பத்துடனோ, சர்வஜன வாக்கெடுப்பின் மூலமோ 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் ஊடாக இலங்கையில் நிர்வாகக் கட்டமைப்பின் முழுமையான மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அப்போது மேற்கொள்ளப்பட்டு வந்த வடமராட்சி இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு, இந்தியத் தூதுவர், அன்றைய ஜனாதிபதியிடம் கோரியிருந்தார் நாட்டை ஆக்கிரமிப்புக்கு உட்படுத்துவதா அல்லது 13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதா என்ற பெரும் அழுத்தங்கள் அப்போது காணப்பட்டன.

மாகாண சபைகள் ஊடாக எந்தளவு சேவைகள் கிடைக்கின்றன என்பதை தீர்மானிப்பதற்கான பொறுப்பை பொதுமக்களிடம் விட்டு விடுகிறோம். அன்று சிலர் தொடர்பில் இருந்த இரகசியங்கள் தற்போது பேசப்பட்டு வருகிறது.

நான் அன்று உப அரசாங்க அதிபராக இருந்த போது, மக்களுக்கு காணித் துண்டுகளை வழங்கும் அதிகாரம் எங்களுக்கு இருந்தது. மாகாண சபைக்கும் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் காணி அதிகாரங்கள் இருப்பதால், காணி இல்லாதவர்கள் காணித்துண்டு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக பல இடங்களுக்கும் வீணாக அலைந்து திரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற காணி உறுதிகளை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

# மன்னார் நீதவான் அச்சுறுத்தல்; வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் மன்னார் முன்னாள் நீதவான் அந்தோனிப்பிள்ளை யூட்சனுக்கு தொலைபேசியூடாக கொலை மிரட்டல் விடுத்தமை ஆகிய விவகாரங்கள் தொடர்பான வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இவ்விரு வழக்குகளும், மன்னார் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்படி இரு வழக்குகளையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மன்னார் மாவட்ட நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் இவ்விருவழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மன்னார் நீதிமன்றத்தின் மீது கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட 52 பேரும் இந்த வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

இந்நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த வழக்கினை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அத்துடன், மன்னார் முன்னாள் நீதவான் அந்தோனிப்பிள்ளை யூட்சனுக்கு தொலைபேசியூடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதான வழக்கும் நேற்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கின் சந்தேக நபரான அமைச்சர் றிசாட் பதீயுதீன், நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். குறித்த வழக்கினையும செப்ரெம்பர் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதவான் உத்தரவிட்டார்.

# அமைச்சுக்களை ஒதுக்கும் போது தராதரங்களை கடைப்பிடிக்க வேண்டும்

அமைச்சுக்களை ஒதுக்கும் போது புதிய தராதரங்களை கடைப்பிடிக்கவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. ஒரு அமைச்சின் கீழ்வரும் விடயங்கள் சிக்கலானதாக இருக்கக்கூடாது என்றும் அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிற்சங்க சேவையின் சம்மேளனத்தின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவைகள் இன்று குழம்பிப்போயுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு அமைச்சரிடம் பல விடயங்கள் கொடுக்கும் போது பொறுப்புக்களை தட்டிக்கழிக்க முடிகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள மாகாண சபை அமைச்சரும் மத்திய அரசாங்க அமைச்சரும் ஒற்றுமையாக வேலைசெய்யவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தோல்விகண்ட திணைக்களத்துக்கு வளிமண்டலவியல் திணைக்களம் நல்லதொரு உதாரணமாகும். அமெரிக்கா நேரகாலத்தோடு கொடுத்த எச்சரிக்கையைக்கூட இந்தத் திணைக்களம் மக்களுக்கு அறிவிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# மன்னாரில் கழுதைகளை பராமரிக்க விசேட திட்டம்

மன்னார் மாவட்டத்தில் ஆயிரம் வருடங்கள் பழமைவாய்ந்த கழுதைகளை பராமரித்து பாதுக்காப்பதே தமது நோக்கமென இந்திய கழுதைகள் சரணாலயத்தின் கால்நடை மருத்துவரும் கால்நடை இணைப்பாளருமான ரமேஸ் குமார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள கழுதைகளை பராமரித்து அவற்றை பாதுகாக்கும் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கே தாம் மன்னாருக்கு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மன்னார் நகரசபையும் டயஸ்போரா லங்கா அமைப்பும் இணைந்து மன்னார் மாவட்டத்திலுள்ள கழுதைகளின் பராமரிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன. இந்நிலையில், இங்குள்ள கழுதைகளின் பராமரிப்பு உள்ளிட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் தங்களை அழைத்துள்ளதாகவும் அவர் கூறினார். கடந்த வருடம் நவம்பர் மாதம் தாம் மன்னார் மாவட்டத்திற்கு வந்தபோது, இங்குள்ள அனைவரிடமும் கழுதைகள் தொடர்பான ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

கழுதைகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டுமென்பது தொடர்பில் ஆலோசனை செய்து கழுதைகளைப் பாதுகாப்பதற்காக மன்னாரில் கழுதைகள் பாதுகாப்பு காப்பகமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

தங்களது கணக்கெடுப்பின்படி மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 375 கழுதைகள் உள்ளன. இவற்றில் பெண் கழுதைகளும் குட்டிக் கழுதைகளும் அதிகமாக உள்ளனவெனவும் அவர் கூறினார்.

கால்நடை வைத்தியர்கள் சிலர் அழைக்கப்பட்டு அவர்களுக்கு கழுதைகளுக்கு சிகிச்சை வழங்குவது தொடர்பில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளன.

கழுதைகளினால் விபத்துக்கள் உட்பட பல இடையூறுகள் தங்களுக்கு ஏற்படுவதாக மன்னார் மக்கள் ஏற்கெனவே கூறியதுடன், இதன் காரணமாக கழுதைகள் வேண்டாமெனவும் கூறியிருந்தனர்.

இந்நிலையில், கழுதைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவான அறிவுரையை தாம் வழங்கியதாகத் தெரிவித்த அவர், கழுதைகளின் முக்கியதத்துவம் தொடர்பில் தற்போது கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வை மேலும் வழங்கி வருவதாகவும் கூறினார்.

## அமைச்சரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நேர்காணல் (பகுதி-2)



# 13ஆவது திருத்தத்தில் இருந்து தொடங்கி அதற்கு மேலதிக அதிகாரங்களை பெற்று எமது அரசியல் இலக்கை அடைவோம்

**இலங்கை இந்திய ஒப்பந்தத்தை குட்டிச்சுவராக்கியவர்களும், மறுபுறத்தில் அதை அரைகுறைத் தீர்வு, உழுத்துப்போன தீர்வு என்று கூறியவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலேயே உள்ளார்கள். சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கொண்டு வந்த தீர்வுத்திட்டத்தை எதிர்க்கட்சிகளோடு இணைந்து நாடாளுமன்றத்தில் எரித்தும், தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியும் தீர்வு முயற்சிகளை தடுத்து நிறுத்திய சுயலாப தமிழ்க் கட்சிகள் தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணவில்லை என்று கூற முடியுமா?..**

**கேள்வி**

13ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு ஹெல உறுமய கொண்டு வரவுள்ள பிரேரணைக்கு உங்களது கட்சியின் நிலைப்பாடு எவ்வாறானதாக இருக்கும்?...

பதில்: அவ்வாறு ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டால் நான் ஏற்கனவே சொன்னது போல் எமது தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறி எமது நிலைப்பாட்டையே நாம் வலியுறுத்துவோம். அரசியலுரிமைப் பிரச்சினை தீர்வுக்கு தடையாக வரும் எந்த பிரேரணையையும் நாம் எதிர்க்கவேண்டி வரும்.

**கேள்வி**

வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தின் தேவைக்காக சுவீகரிக்கப்படுகின்றது. வலி வடக்கில் 6400 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கும் நீங்கள் இதை ஏற்கின்றீர்களா?...

பதில்: நான் தமிழ் பேசும் மக்களின் சார்பாகவே அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கின்றேன். ஆகவே எமது மக்களின் நியாய மான விருப்பங்களுக்காக நான் பேச வேண்டிய இடத்தில் பேசியே வருகின்றேன். அழிவு யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் உயர் பாதுகாப்பு வலயம் என்று எதுவுமே இனி இருக்காது என்று ஜனாதிபதி அவர்கள் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பும் எமது விருப்பமும் ஒன்றாகும். அதன்படி உயர் பாதுகாப்பு வலயம் என காணப்பட்ட பிரதேசங்கள் பலவற்றிலும் எமது மக்களை நாம் மீளக்குடியேற்றுவதில் பாரிய வெற்றியை கண்டுள்ளோம். அது போலவே எஞ்சிய இடங்களிலும் எமது மக்களை நாம் மீளக்குடியேற்றுவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஆனா லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலி வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று வெறும் கூச்சல் மட்டும் போடுகிறது. இராணுவம் அங்கிருந்து வெளியேறும் போது சந்தோசமடையப்போவது வலி. வடக்கு நிலத்திற்கு சொந்த மான மக்கள்தான். இதில் கவலை யடையப்போவது தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. காரணம் ஏதாவது ஒரு பிரச்சினையை தூக்கிப் பிடித்துக் கொண்டு தமது தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம். ஆகவே இராணுவம் வலி. வடக்கில் தொடர்ந்தும் நிலை கொள்ள வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விருப்பம். எம்மைப் பொறுத்த வரை மக்கள் எமக்கு ஆணை வழங்கி வடக்கு மாகாண-சபை ஆட்சி அதிகாரத்தை எம்மிடம் ஒப்படைத்தால் ஜனாதிபதி அவர்களின் ஆசியோடு எமது மக்களை பலாலி வரை கொண்டு சென்று குடி யேற்றுவோம். இதுவே நடக்கும். அந்த நல்ல காரியம் நிறைவேறும் காத்திருங்கள்.

**கேள்வி**

வடக்குத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடுவது குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?...

பதில்: தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டும் இருப்பவர்கள் அதைத்தானே செய்வார்கள். இதில் என்ன ஆச்ச ரியம்?... இதைத் தவிர அவர்களால் எதை செய்ய முடியும்?... கால கால மாக தேர்தல் காலங்களில் பச்சைப்பொய்யுரைத்து மக்களை ஏமாற்றி வந்த இவர்கள் இனியும் தங்களது கனவுகள் நிறைவேறும் என்று மனப்பால் குடிக்கிறார்கள். அது இனி நடக்காது என்பது தெளி வாகிவிட்டது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போதும் பல பொய்களை சோடித்து 7 கட்சிகளாக கூட்டமைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 1 இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரம் வாக்குகளே எடுத்தார்கள். நாம் தனியொரு கட்சியாக எதிர்த்து நின்று 60 ஆயிரம் வாக்கு களை எடுத்தோம். கூட்டிக்கழித்துப் பார்த்தால் அந்த தேர்தலில் தனிக்கட்சி யாகிய எமக்கே வெற்றி. தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பிற்கு வாக்களித்த மக்கள் மட்டுமல்ல, வெற்றி பெறவைக் கப்பட்ட அவர்களது உறுப்பினர்கள் கூட இப்போது வேறு திசையில் சிந்திக்கிறார்கள். உள்ளூராட்சி சபை களையே கொண்டு நடத்த முடியாத வர்கள் மாகாணசபையை எப்படி நடத்தப்போகிறார்கள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் இப்போது எழுந் துள்ளது. நிச்சயமாக அவர்கள் போட்டி யிட வேண்டும் என நாம் ஆவலோடு காத்திருக்கிறோம். வடக்கு மாகாண சபை தேர்தலை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு அவர்கள் போட்டியிட முன் வர வேண்டும். விரைவில் காலம் ஒரு செங்கோலை எம் கையில் தரும். அப்போது எமது கனவும், மக்களின் கனவும் நிச்சயம் நிறைவேறும்.

**கேள்வி**

அரசியல் தீர்வு விடயத்தில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லையென கூட்டமைப்பு குற்றம் சாட்டுவதை நீங்கள் ஏற்கின்றீர்களா?...

பதில்: அரசாங்கத்தை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டு விரலை மட்டும் நீட்டும் போது மி-குதியாக உள்ள நான்கு விரல்களும் அவர்களையே சுட்டிக்காட்டுகிறது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை குட்டிச்சுவராக்கியவர்களும், மறுபுறத்தில் அதை அரைகுறைத் தீர்வு, உழுத்துப்போன தீர்வு என்று கூறியவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலேயே உள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கொண்டு வந்த தீர்வுத்திட்டத்தை எதிர்க்கட்சிகளோடு இணைந்து நாடாளுமன்றத்தில் எரித்தும், தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியும் தீர்வு முயற்சிகளை தடுத்து நிறுத்திய சுயலாப தமிழ்க் கட்சிகள் தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணவில்லை என்று கூற முடியுமா?.. அதன் பின்னரான ரணில் புலிகள் பேச்சுவார்த்தை, இறுதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசுடனான பேச்சுவார்த்தை என்று கூறி நோர்வே, ஜப்பான், தாய்லாந்து, சுவிற்சர்லாந்து என்று உலகத்தை சுற்றி வந்தபோது இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த நிலைப்பாட்டை எடுத்தார்கள்?... அரச தரப்பினர் முன்னெடுத்து வந்த அரசியல் தீர்வை ஆதரித்து வலியுறுத்தினார்களா?... இல்லை.

யுத்தம் நடத்துவோம் வெறும் சுயலாபங்களுக்காக கூக்குரல் எழுப்பியவர்களே இவர்கள். இதே இவர்கள் தான் யுத்தத்தை நடத்தி முடித்த ஜனாதிபதி அவர் களுக்கு நன்றி தெரிவித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்கள். கால காலமாக கனிந்து வந்திருந்த சந்தர்ப்பங்களை திட்டமிட்டே தவற விட்டவர்கள் இவர்கள். இறுதியாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக தீர்வு காண வருமாறு அரசாங்கம் அழைத்த போது மறுத்து விட்டார்கள். ஆறு மாத கால அவகாசம் கொடுத்தது அரசாங்கம். அறுபது ஆண்டு கால அர சியலுரிமை பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆறு மாத கால அவகாசத்தை வைத்து முயன்று கூட பார்க்க முடியாதவர்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். ஆறு மாத கால் அவகாசத்தில் அரசாங்கம் பிரச்சினையை தீர்க்கவில்லை என்றால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவை விட்டு அவர்கள் தாராளமாக வெளி யேறி அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்திருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை. அரசாங்கம் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட்டால் அவர்கள் தேர்தலில் வெல்ல முடியாது.

நாடாளுமன்றம் செல்ல முடியாது. அரசின் பின் கதவு தட்டி சலுகை களை பெற முடியாது, அந்த அச்சம் காரணமாகவே தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயங்குகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினைகள் வேறு, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் வேறு. இந்த சூட்சுமங்களை புரியாதவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எம்மைப் பொறுத்தவரை எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய விருப்பங்கள் முதலில் தமிழ்க் கட்சிகளுக்கே இருக்க வேண்டும். அதன் பிறகுதான் அரசாங்கம். அரசாங்கத்தை தீர்வின் திசை நோக்கி அழைத்து வரவேண்டியது தமிழ்க் கட்சிகளின் கடமையே ஆகும்.

**கேள்வி**

அரசியல் தீர்வு விடயத்தில் சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என நிலைப்பாடு காணப்படுகின்றது. இந்த ஒத்துழைப்பு முயற்சிக்கு நீங்கள் ஒன்றிணை வீர்களா?....

பதில்: ஒற்றுமைக்கான எமது கதவு-கள் திறந்துதான் இருக்கின்றன. மூடிக்கிடக்கும் கதவுகளை தட்டித்திறக்கவும் நாம் தயார். ஏற்கனவே நானே முன்னின்று தமிழ் கட்சிகளின் அரங்கத்தை உருவாக்கி பல தடவைகள் கூடிப்பேசியும் இருக்கின்றோம். ஆனாலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் திட்டமிட்டே அந்த ஒற்றுமை முயற்சிகளை கைவிட்டு நழுவி விட்டனர். எம்மைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருந்தாத வரை அவர்களின் சுயலாப சகதிக்குள் இரண்டறக் கலக்க நாம் ஒரு போதும் விரும்பமாட்டோம். ஆனாலும், தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் பொதுவான ஒரு உடன்பாட்டிற்கு செல்ல நாம் தயாராகவே இருக்கின்றோம்.

ஒவ்வாரு கட்சியும் ஒவ்வொரு இலக்கு குறித்து சாத்தியமற்று பேசுகிறார்கள். இதில் எது சாத்தியம்?.. எது சாத்தியம் அற்றது?.. என்ற விவாதத்தில் ஈடுபட்டு காலம் கழிக்க முடியாது. அரசியல் தீர்வு விடயத்தில் எங்கிருந்து தொடங்குவது சாத்தியம் என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பொது உடன்பாடு காண நாம் விரும்புகின்றோம். எங்கிருந்து தொடங்குவது எனபதற்கு விடை நிச்சயமாக நாம் கூறும் வழி தவிர வேறு எவரிடமும் எந்த வழியும் இருக்க முடியாது. அப்படி நடை முறைச் சாத்தியமான வழி இருந்தால் அதை ஏற்று நடக்கவும் நாம் தயார். பொது உடன்பாடு காண நான் சகல தமிழ் கட்சிகளை நோக்கியும் மறுபடியும் பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன்.

# ஹெல உறுமயவின் பிரேரணை இனவாதத்தை தூண்டுவதாக உள்ளது

## என்கிறார் சோமவன்ச அமரசிங்க

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக ஜாதிக ஹெல உறுமயவினால் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையானது பௌத்த இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

எனவே, இதற்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆதரவளிக்காது. மாறாக தேசியளவில் புதிய அரசியல் அமைப்பொன்றுக்கான தேவை காணப்படுவதாக அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

அனைதது இன மக்களுக்கும் சமத்துவம், சுதந்திரம் மற்றும் சகோதரத்துவம் என்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசியல் அமைப்பு நிறுவப்பட வேண்டும். அவ்வாறு அல்லாது தற்போதுள்ள அரசியலமைப்பில் சிறு சிறு திருத்தங்களை ஏற்படுத்தி நாட்டில் இனவாதத்தை தூண்டிவிட்டு அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுப்புக்களை மேற்கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜாதிக ஹெல உறுமய 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தனிநபர் பிரேரணையினை நாடாளுமன்றத்தில் முன்வைத்து அதற்கு ஆதரவு அளிக்குமாறு வலியுறுத்தி அனைத்து கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றது. ஆனால், இப்பிரேரணையில் நியாயமான நோக்கங்கள் எதுவும் இல்லை. மாறாக இனவாதத்தை அடிப்படையாகக் கொணட உள்நோக்கங்களே காணப்படுகின்றன.

அனைத்து இன மக்களுக்கும் சமத்துவமான சந்தர்ப்பங்கள், சமாதானம் மற்றும் சகோதரத்துவம் என்பவை உரியவகையில் கிடைக்க வேண்டும். அப்போதுதான் அனைத்து இன மக்களுக்கும் பொருளாதார மற்றும் அரசியல் சமத்துவம் கிடைக்கும். இல்லையென்றால் இன முரண்பாடுகளே தோன்றும்.

தற்போது காணப்படுகின்ற மாகாண சபை முறைமையானது ஏற்றுக்கொள்ளும் விதத்திலோ அனைத்து இன மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையிலோ அமையவில்லை. எனவே, இம்முறைமை முற்றாக இல்லா தொழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜே.வி.பி. தொடர்ந்தும் உள்ளது. 13 ஆவது திருத்தச்சட்டத்தை பொறுத்த வரையில் தற்போதைய சூழ்நிலை உண்மையான தன்மையை கடந்து சென்றுள்ளது.

எனவே, இதனை மாத்திரம் திருத்தத்திற்கு உட்படுத்துவதால் எதுவிதமான பலனும் ஏற்படப்போவதில்லை. ஆளும் தரப்பினரால் 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளானது வெறும் அரசியல் மற்றும் குறுகிய நோக்கங்களையே கொண்டுள்ளது எனக் கூறினார்.

# குற்றப்புலனாய்வு பிரிவால் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கைது

(கொழும்பு)

பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

அவரிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் வாக்குமூலமொன்றை பெற்றுக்கொண்டதன் பின்னரே அவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் சியாம் என்பவரை கடத்திக் கொலை செய்த சம்பவம் தொடர்பிலேயே இவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரும் அடங்கலாக நான்கு பொலிஸாரும் இரண்டு சிவிலியன்களும் கடந்த 06 ஆம் திகதி வியாழக்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சிவிலியன்கள் இருவரும் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொம்பே பகுதியில் வைத்து கடந்த 22 ஆம் திகதி கடத்தப்பட்ட வர்த்தகர் பம்பலப்பிட்டி பகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மாதாந்தம் 30 ஆயிரம் வாகனங்கள் பதிவு மோட்டார் சைக்கிள்கள் மட்டும் பத்தாயிரம்

(கொழும்பு)

மாதாந்தம் பத்தாயிரம் மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்படுகின்றன

நாட்டில் மாதாந்தம் அதிகளவான மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்படுவதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் பத்தாயிரம் மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்படுவதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிஸ்சந்திர கூறியுள்ளார்.



இதற்கு அடுத்த படியாக முச்சக்கர வண்டிகளே அதிகம் பதிவு செய்யப்படுவதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதேவேளை, நாட்டில் சாதாரணமாக சுமார் 30 ஆயிரம் வாகனங்கள் மாதாந்தம் பதிவு செய்யப்படுவதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம்களுக்கான பல்கலைக்கழகம் அமைவதை அங்கீகரிக்கமாட்டோம்

## பொதுபலசேனா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பௌத்த சிங்கள ராஜ்ய நாடாக இருப்பதனால் இங்கு முஸ்லிம்களுக்கென்றொரு பல்கலைக்கழகம் சவுதி அரேபியாவின் உதவியுடன் உருவாகுவதை பொதுபலசேனா ஒருபோதும் அங்கீகரிக்கப் போவதில்லை.

இந்நாட்டில் சிங்களம் தமிழ் முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற போதும் தனியாக ஒரு இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் எந்தவொரு நிறுவனத்தையும் எமது அமைப்பு ஏற்றுக் கொள்ளாது என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்தார்.

பொதுபலசேனாவின் கிழக்கின் முதலாவது மாவட்ட மாநாடு நேற்றுமுன்தினம் அம்பாறை நகரில் அம்பாறை பிரிவேனாவின் தலைவர் கிரிந்திவெல சோமரத்ன தேரர் தலைமையில் நடைபெற்றது. இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது பௌத்த கலாசாரம் கொண்ட நாட்டினை ஐரோப்பிய இனத்தவர்கள் சுமார் 500 வருடங்கள் தமது ஆட்சிக்குட்படுத்திய போதும் கண்டி இராச்சிய காலத்திலே கண்டி அரசனால் சிறைப்பிடிக்கப்பட்ட றொபட் நொக்ஸ் என்பவர் சிறையிலிருந்து கொண்டே இலங்கையின் வரலாறு என்ற நூலை எழுதினார்.

அதிலே கண்டியிலிருந்து திருகோண மலை வரையிலான பகுதியிலே 96 சிங்கள கிராமங்கள் இருந்ததாக எழுதி உள்ளார். அவைகள் இன்று எங்கே அக்கிராமங்களுக்கு என்ன நடந்தது.

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தில திகாமடுல்ல மாவட்டத்தில் 600 பொலிஸார் கொல்லப்பட்டனர். அறந்தலாவையில் பிக்குகள் அறுக்கப்பட்டனர். ஆனால் அந்த நிலை இன்று இல்லை பொதுபல சேனா அமைப்பு கிழக்கிற்கு வரவுள்ளது என்ற செய்தி கேட்டு அக்கறைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, காத்தான்குடி, ஏறாவூர் போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்கள் ஹர்த்தால் செய்தனர் இன்று நடைபெறும் மாநாட்டைக் கூட அம்பாறையில் நடத்தக்கூடாது என்று ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் எழுதி நேரில் சென்று கொடுத்துள்ளார்கள்.

ஆனால் இந்த அமைப்பு ஒருபோதும் இனங்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்படுத்தும் அமைப்பாக செயற்படமாட்டாது. காலி பலபிட்டிய பிரதேச கடல் கொந்தளிப்பினால் காணாமற் போன மீனவர்களை தேடி மீட்கும் பணியை செய்தவர்கள் முஸ்லிம்களே அண்மையில் அக்கரைப்பற்று திருக்கோவில் பிரதேசத்தில் மூன்று மதஸ்தலங்கள் டோஷர்கொணடு தரைமட்டமாக்கப்பட்டன.

இவ்றைப் பல இடங்களில் கூறியும் எமக்குப் பலன் கிடைக்கவில்லை ஆட்சியாளர்கள் கண் திறந்து பார்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஹெரோயின் புகைத்ததால் தண்டம்

(கொழும்பு)

கொம்பனி வீதியில் ஹெரோயின் புகைத்துக்கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட இராணுவ வீரருக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

குறித்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டார்.

இவருக்கு எதிரான குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்த பொலிஸார் இவரை கைது செய்யும்போது அவர் தன்வசம் 20 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டினர்.

இராணுவ வீரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது தரப்பைச்சேர்ந்த பிரதிவாதி குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாகவும், கூடாத கூட்டத்துடன் சேர்ந்தமையினால், அவர் இந்த குற்றத்தை இழைக்கநேர்ந்ததாகவும் குற்றங்களுக்காக அவர் மனம்வருந்துவதாகவும் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்தே அரச செலவாக 10 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

### முற்கொடுப்பனவு அட்டைமுறை ஆரம்பம்

பேருந்து கட்டணங்களைச் செலுத்துவதற்கான முற்கொடுப்பனவு அட்டை முறைமை நேற்று முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொட்டாவை மற்றும் மத்தேகொட ஆகிய பகுதிகளிலிருந்து புறக்கோட்டைக்கு சேவையில ஈடுபடும் தனியார் பேருந்துகளில் நேற்று இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறியுள்ளார்.

# இந்திய பிரஜை கைது

(கொழும்பு)

சுற்றுலா விஸாவில் வந்து சட்டவிரோதமாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 37 வயதான இந்திய பிரஜை ஒருவரை உப்புவெளி பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்துள்ளனர்.

சென்னையைச் சேர்ந்த இந்த சந்தேக நபரை திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.







1755 ஆம் ஆண்டுகால நாணயங்கள் மற்றும் தாழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கற்பிட்டி, இலந்தையடி பிரதேசத்தில் 1755ஆம் ஆண்டு மற்றும் 1773 ஆம் ஆண்டு ஆகிய காலப்பகுதிக்குரிய புராதன நாணயங்கள் மற்றும் புராதன காலத்தினது என நம்பப்படும் தாழி என்பன பிரதேச மீனவர்களினால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறித்த பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பினையடுத்து அங்கு தெரியவந்த சிவப்பு நிறத்திலான வலயத்தினை மீட்க முற்பட்ட போது அது புராதன கால தாழி என தெரியவந்துள்ளது. இதனையடுத்து மீனவர்கள் அதனை மீட்டு மீனவர் ஒருவரின் வீட்டில் வைத்துள்ளார்கள். இத்தாழியினை மீட்கும் போது அதனுள்ளிலிருந்து புராதன கால நாணயங்களும் மீனவர்களினால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட புராதன பொருட்கள் தொடர்பில் கிராம சேவையாளருடாக பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழலை பாதிக்காதவகையில் மணல் அகழ்வு இடம்பெறவேண்டும்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற மணல், கிரவல், அகழ்வு நடவடிக்கைகள் மாவட்டத்தின் சுற்றுச் சூழல் நலன்களை கருத்தில் எடுத்தே மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை உரிய துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற மணல் மற்றும் கிரவல் அகழ்வு அதற்கான அனுமதி வழங்கல் தொடர்பான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெருமளவு அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகிறன. இதற்காக மணல் மற்றும் கிரவல்கள் அதிகம் இந்த மாவட்டத்திற்கு தேவையாக உள்ளது.

எனவே, இந்த அபிவிருத்தி தேவைகளுக்காக மணல் கிரவல் அகழப்படுகின்ற போது இயற்கையின் நலன்களை அதிகளவில் கவனத்தில் கொள்ள வேண்டும். முக்கியமாக மாவட்டத்திற்கு வெளியே கிரவல் மற்றும் மணல் கொண்டு செல்லப்படுவதனையும் சட்டவிரோத மணல், கிரவல் அகழ்வுகளையும் தடுக்க வேண்டும்.

தவறின் இந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் கிளிநொச்சியின் இயற்கையை பெருமளவில் பாதித்து பல பாதிப்புக்கள் ஏற்பட காரணமாக அமைந்து விடும்.

சட்டவிரோத மணல் மற்றும் கிரவல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் மீது கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படல் அவசியமாகும்.

அத்தோடு இந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பிரதேசங்களில் உள்ள கிராம மட்ட அமைப்புகளின் பூரண ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகும் மக்களின் ஒத்துழைப்புடனும் அனைவரினதும் கூட்டு செயற்பாட்டின் மூலமே சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியும் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மாவட்டச் செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன், உதவித் திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நெல்லியடி கிளையின் வாடிக்கையாளராகிய கயமுகன் காட்வெயர் உரிமையாளர் இ.ராகுலனின் ஆயுட்காப்புறுதிக்கான மரணக்கொடுப்பனவு ரூபா அறுபத்தொரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை (6,150,000/=) அவரது தாயாரிடம் நெல்லியடிக் கிளை முகாமையாளர் கு.ஆறுமுகன் கையளிப்பதைக் காணலாம். (01, 18)

# கூழாவடிக் கிராமத்திற்கு முதன்முறையாக மின்சாரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் குழாவடி பிரதேச மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக்கிராமத்துக்கு மின்சார விநியோகம் ஏற்படுத்தப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

உருத்திரபுரம் பகுதிக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த போதிலும் கூழாவடிப் பிரதேசத்திற்கு மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இக்கிராமம் தற்போது மின்சாரத்தினைப்பெற்றுள்ளது.

இதுவரை காலமும் குப்பி விளக்குகள் சோளர் மின் சாதனங்களைப் பயன்படுத்தியே இப்பகுதி மக்கள் வீடுகளுக்கு ஒளி ஏற்றியதுடன் இலத்திரனியல் சாதனங்களையும் இயங்க வைத்தனர்.

நெற்பயிற்செய்யையும், வீட்டுத்தோட்டச் செய்கையையும் அடிப்படை வருமானமாகக் கொண்ட இக் கிராமம் பொருளாதார ரீதியாக ஓரளவு முன்னேற்றம் பெற்றிருந்தது. 5ஏக்கர் திட்டத்தினைக்கொண்ட இந்தக் கிராமம் பரந்த நிலப்பரபபை கொண்டதாகும். இப்பொழுது இந்தக்காணிகள் பிரிக்கப்பட்டு அவர்களது பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

பெருமளவு மக்களைக் கொண்ட இந்தக்கிராமத்திற்கு கொங்றீற் தூண்கள் நாட்டப்பட்டு வீடுகளுக்கும் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. முதன் முறையாக மின்சாரம் கிடைக்கப்பெற்றதற்கு ஆவன செய்தவர்களுக்கும், வடக்கின் வசந்தத்திற்கும் மக்கள் பெருமையுடன் நன்றிகளைத் தெரிவிக்கின்றனர். (21)



# அழகிகள், நள்ளிரவில் விருந்திற்குத் தடை

ஐ.பி.எல். ருவென்ரி-20 தொடரில்சர்ச்சைகளைத் தவிர்க்கும் வகையில் உற்சாக மூட்டும் அழகிகளின் நடனம் மற்றும் போட்டிகள் முடிந்ததும் நடத்தப்படும் நள்ளிரவு விருந்து உட்பட 12 விடயங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் சபையின் இடைக் காலத் தலைவர் டால்மிய தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தின்போது இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் விபரம் வருமாறு

1. சியர்லீடர்கள், விருந்திற்குத் தடை.

2. வீரர்கள், உதவியாளர்கள், அணி உரிமையாளர்களுக்கு கடுமையான விதி-முறைகள்.

3. வீரர்கள் அறை மற்றும் முகாமில் உரிமையாளர்கள் நடமாடத் தடை.

4. போட்டித் தொடர் ஆரம்பமாகும் முன்பாக, இவர்கள் அனைவரும் தங்கள் கைத்தொலைபேசி எண்களை கிரிக்கெட் சபையிடம் தெரிவிக்க வேண்டும்.

5. தேவையான அளவு ஊழல் தடுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

6. மைதானத்தில் கைத்தொலைபேசி சிக்னல்களை தடை செய்யும் கமராக்கள் பொருத்தப்படும்.

7. கப்டன்களுக்கு ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படும்.

8. எந்த ஒரு ஐ.பி.எல். அணி நிர்வாகத்திலும் தேசிய அணி தேர்வுக் குழு உறுப்பினர்கள் பொறுப்பு வகிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

9. வீரர்கள் தங்களின் விளம்பர ஒப்பந்தங்கள், முதலீடுகள், பணப் பரிமாற்றங்கள் குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும்.

10. வீரர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஒப்பந்த தொகை குறித்த விவரங்களை அணி உரிமையாளர்கள் அளிக்க வேண்டும்.

11. வீரர்கள் மைதானத்தின் உள்ளே மைக்ரோபோன்கள் உபயோகிக்கத் தடை.

12. பாதுகாப்பு கட்டுப்பாடுகள் குறித்த புதிய கொள்கை விரைவில் வகுக்கப்படும்.

இந்திய கிரிக்கெட் சபையின் (பிசிசிஜ) புதிய பொருளாளராக மும்பை கிரிக்கெட் சங்கத் தலைவர் ரவி சாவந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

Season 6

IPL

# கவலையில்லை



(லண்டன்)

ஐ.பி.எல். சூதாட்ட பிரச்சினைக்குப் பின்னர் இந்திய கிரிக்கெட் சபை மேற்கொண்டு வரும் நடவடிக்கை குறித்து நாம் கவலை கொள்ளவில்லை என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

வீரர்கள் என்ற முறையில் எங்களால் சில விடயங்களை முடிந்த அளவு கட்டுப்படுத்த தான் முடியும். இங்கு நாங்கள் பத்திரிகை மற்றும் தொலைக் காட்சி செய்திகளைப் பார்க்கவில்லை. இதனால் எங்களுக்கு எந்த தொந்தரவும் இல்லை.

கிரிக்கெட்டில் மட்டுமே நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். இந்த ஆட்டத்தில் 4 வேகப்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்கும்திட்டம் இல்லை. அப்படி செய்தால் முடிவு எமக்கெதிராக போய் விடும். என் மீதுகுற்றச்சாட்டு வரும். ஓவல் மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு மட்டுமின்றி சுழற் பந்து வீச்சுக்கும் உதவி கரமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.



# வென்றது எகிப்து

(ஹராரே)

சிம்பாப்வே அணிக்கு எதிரான உலக கிண்ண கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் எகிப்து அணி வெற்றி பெற்றது.

பிரேசிலில் உலக கிண்ண கால்பந்து தொடர் வரும் 2014இல் (ஜூன் 12 – ஜூலை 13) நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச்சுற்று போட்டிகள் உலகின் பல்வேறு பகுதியில், பல்வேறு கட்டங்களாக நடக்கிறது. சிம்பாப்வேவில் நடந்த உலக கிண்ணத் தகுதிச்சுற்றுப் போட்டியில் எகிப்து, சிம்பாப்வே அணிகள் மோதின.

போட்டியின் முதல்பாதியில் எகிப்து அணியின் அபுதியாகோ (5ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார்.இதற்கு சிம்பாப்வே அணியின் முசோனா (21ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார். தொடர்ந்து முகமது ஷாலா (41ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க எகிப்து அணி முன்னிலை பெற்றது. பின் இரண்டாவது பாதியிலும், அசத்திய எகிப்து அணிக்கு முகமது கூஷாலா (76ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு சிம்பாப்வே அணிக்கு லிங்கன் (81ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார். தொடர்ந்து அசத்திய முகமது ஷாலா (83ஆவது நிமிடம்) மீண்டும் ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். ஆட்டநேர முடிவில், எகிப்து அணி 4 – 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# ராம்டீனுக்கு போட்டித் தடையும் அபராதமும்

(லண்டன்)

விளையாட்டு உணர்வுடன் நடந்து கொள்ளத் தவறிய மேற்கிந்தியத்தீவுகள் விக்கெட் காப்பாளர் ராம்டீனுக்கு அபராதத்துடன், இரண்டு போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

சமீபத்தில் லண்டனில் நடந்த சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடருக்கான லீக் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது.

இப்போட்டியின் 9ஆவது ஓவரில் ரோச் வீசிய பந்தை பாகிஸ்தான் கப்டன் மிஸ்பா அடிக்க, அதனை பிடித்த ராம்டீன் நழுவவிட்டார். ஆனாலும், முறையீடு செய்தார். அவுஸ்ரேலிய நடுவர் ஸ்டீவ் டேவிசும் ஆட்டமிழப்புக் கொடுத்தார். பின் பக்க நடுவர் நைஜல் டிலாங், சந்தேகம் எழுப்ப, மூன்றாவது நடுவர் டோனி ஹில்லிடம் கேட்கப்பட்டது. தொலைக்காட்சி ரீப்ளேயில் பந்தை ராம்டீன் நழுவவிட்டது தெரியவர, ஒரு ஓட்டம் கூட எடுக்காத மிஸ்பா கண்டம் தப்பினார்.

இதையடுத்து விளையாட்டு உணர்வு இல்லாமல் ராம்டீன் நடந்து கொண்டதாக, நடுவர்கள் குற்றம் சாட்டினர். இவர் மீது, ஐ.சி.சி., 2.2.11 விதிமுறையின் படி குற்றம் பதிவு செய்யப்பட்டது.

இப்பிரச்சினை குறித்து ஐ.சி.சி., போட்டி நடுவர் கிறிஸ் போர்ட் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணை நடந்தது. இதில் ராம்டீன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால், போட்டி சம்பளத்தில் இருந்து 100 சதவீத அபராதத்துடன், இரண்டு போட்டியில் விளையாட தடைவிதிக்கப்பட்டது. இதனையடுத்து சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பங்கேற்கவுள்ள எஞ்சிய இரண்டு லீக் போட்டியில் விளையாடும் வாய்ப்பை அவர் இழந்துள்ளார்.



இது குறித்து போட்டி நடுவர் கிறிஸ் பிராட் கூறுகையில், இச்சம்பவத்தின் மூலம் ராம்டீன் பாடம் கற்றுக் கொள்வார். இனிவரும் நாட்களில் இதுபோன்ற மோசமான செயல்களில் ஈடுபடமாட்டார் என நினைக்கிறேன். இது மற்ற வீரர்களுக்கும் எச்சரிக்கையாக அமையும் என்றார்.

# பொறுப்புணர்ந்து ஆடவில்லை

# தோல்வியால் மிஸ்பா சீற்றம்

(லண்டன்)

துடுப்பாட்ட வீரர்கள் எவரும் பொறுப்புடன் ஆடவில்லை. இதுவே சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடரில் இரு போட்டிகளிலும் தோல்வியடையக் காரணம் என பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவு, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரு போட்டிகளிலும் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே தோல்விக்குக் காரணம். பந்து வீச்சாளர்கள் தமது பங்களிப்புச் செய்துள்ளனர். ஆடுகளம் ஒன்றும் அப்படி மோசமானதாகச் சொல்ல முடியாது. இதில் எங்களுடைய வீரர்கள் சரியான ஷொட்களைத் தெரிவு செய்து ஆடத் தவறி விட்டனர். இந்திய அணியுடனான ஆட்டம் மிகவும் முக்கியம். இதற்கு சிறப்பான முறையில் நாம் தயாராக வேண்டும். இதில் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள முற்படுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆண்டு இறுதிக்குள் முதலிடம்

# நடால் நம்பிக்கை

(பாரிஸ்)

இந்த ஆண்டு இறுதிக்குள் உலக தர வரிசையில் மீண்டும் முதல் இடத்தை பிடிப்பேன். இந்த ஆண்டில் இன்னும் 6 மாதம் இருக்கிறது. காயம் அடையாமல் இதே நிலை தொடர்ந்தால் என்னால் முதல் இடத்தை கண்டிப்பாக பிடிக்க முடியும் என நட்சத்திர வீரர் ரபெல் நடால் தெரிவித்துள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் முதல் இடத்தை பிடிக்க வேண்டும் என்றால் சீசன் முழுவதும் சிறப்பாக செயற்பட வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் மற்ற வீரர்களும் கடும் சவாலாக விளங்குகிறார்கள். தொடர்ந்து நிறைய புள்ளிகளை பெற வேண்டும். எனது உடல் தகுதியை சோதனை செய்து விட்டு விம்பிள்டன் போட்டிக்குத் தயாராக முடியும் என்று நம்புகிறேன். விம்பிள்டன் போட்டிக்கு முன்பு நான் எந்த போட்டியிலும் பங்கேற்க விரும்பவில்லை.

பிரெஞ்ச் ஓப்பன் வெற்றிக் கொள்ளப்பட்டபோதும் தரப்படுத்தலில் ஒரு நிலை சரிவடைந்திருப்பது கவலைதான். இருப்பினும் வீரர்களின் புள்ளிகள் அடிப்படையிலேயே தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது குறித்து நான் அதிகம் கதைக்க விரும்பவில்லை. எனது கவனம் முழுவதும் ஒவ்வொரு போட்டியிலும் திறமையாக ஆடவேண்டும் என்பதே. அந்த இலக்கு எல்லாவற்றையும் முறியடித்துவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# உத்வேகம் அளித்த வெற்றி

## பின்வரிசை வீரர்களுக்கு மக்கலம் பாராட்டு

(லண்டன்)

இலங்கை அணியுடனான போட்டியில் போராடி வென்றாலும் முதல் வெற்றி எமக்கு உத்வேகத்தை அளிக்கிறது. இதன் மூலம் உளவியல் ரீதியாக திடமான மனத் தைரியத்தை வீரர்களுக்கு இப்போட்டியின் வெற்றி வழங்கியிருக்கும் என்று நம்புகின்றேன் என நியூசிலாந்து அணிக் கப்டன் மக்கலம் தெரிவித்தார்.

இலங்கை அணிக்கெதிரான வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. இலங்கைக்கு எதிராக எங்களது வெற்றி விகிதாசாரம் சிறப்பானதாக கிடையாது. எங்களது துடுப்பாட்ட வீரர்கள் பயத்துடன் ஆடினாலும், பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர். இலங்கை பந்து வீச்சை சமாளித்து வெற்றி இலக்கை எட்டுவது சிரமமாக இருந்தது. கடைசிக் கட்டத்தில் சில இணைப்பாட்டம் அதிர்ஷ்டவசமாக சிறப்பாக அமைந்தது. இதற்கு பின்வரிசை வீரர்கள் பொறுப்பான ஆட்டமே காரணம். தொடர்ந்து வரும் ஆட்டங்களிலும் வெற்றிக்காகப் போராடும். எமது அணி சகல துறைகளிலும் சிறந்த வீரர்களைக் கொண்டுள்ளது. இது எமக்கான நல்ல வாய்ப்பைப் பெற்றுத் தரும் என்று நம்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டி
# ஊர்காவற்றுறை, மானிப்பாய் மகளிர் கல்லூரி சம்பியன்






இளவாலை ஹென்றியரசர்



சித்திவிநாயகர் வித்தியாலயம்






வவுனியா இறம்பைக்குளம்



வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

மாகாண உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டி நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அணிகள் பங்குகொண்டன.

இதில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்கள் அணிகள் பங்குகொண்டன. இதில் ஆண்கள் பிரிவில் கடந்த ஆண்டு மாகாண, தேசிய போட்டிகளில் அசத்திய, அனைவரது எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருந்த ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணி, இவ்வாண்டும் முதலிடத்தைப் பிடித்துக் கொள்ளும் என அடித்துக் கூறப்பட்டது. முதலிடத்திற்கான போட்டியில் இளவால்ல ஹென்றியரசர் கல்லூரி அணியும், ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. இதில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரியின் உடல் அசைவுகள், அவர்களின் வேகமான செயற்படு என்பன மத்தியஸ்தர்களுடன் முதல் பார்வையாளர்களை கொள்ளைகொள்ளச் செய்யது. இறுதியில் முதலாமிடத்தை ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயமும் பிடித்துக் கொண்டன.

பெண்களுக்கான போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய அணியும், மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. இதில் இரு கல்லூரி அணி வீராங்கனைகளின் செயற்பாடுகளும் வித்தியாசமாகவும், எங்கள் வீராங்கனைகளும் இந்த வேகத்தில் செயற்படுவார்களா? என்ற ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. இறுதியில் முதலாமிடத்தை மானிப்பாய் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை அணியும் பிடித்துக் கொண்டன.

இப்போட்டி நிகழ்வு வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சத்தியபாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் வடமாகாண கல்வி வலயத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள், வீர,வீராங்கனைகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(93,74)

விளையாட்டுச் செய்திகள்

## பாடுமீன் அணி மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் யாழ். காலப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்திய கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பாடுமீன் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுகொண்டது.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கால்ப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 9 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்ப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவருகின்றது.

மேற்படிசுற்றுப்போட்டிகளின் மூன்றாமிடத்திற்காக ஆட்டம் கடந்த வியாழக்கிழமை குருநகர் பாடும்மீன் அணிக்கும் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

போட்டியின் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய பாடுமீன் அணி, அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது.

தொடர்ந்து பதில் கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுப்பட்ட சென்.அன்ரனீஸ் அணியின் முயிற்சி கைகூடாத நிலையில், போட்டியில் 2:0 என்ற கோல் கணக்கில் பாடுமீன் அணி வெற்றி பெற்று மூன்றாமிடத்திணை தட்டிச் சென்றது.


## முதல் டெஸ்ட் நடுவர் மரணம்

இலங்கையின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நடுவராக கடமையாற்றிய கந்தையா பிரான்சிஸ் தமது 73 ஆவது வயதில் காலமானார்.

நீரிழிவு நோயின் காரணமாக சிகிச்சை பெற்று வந்த பிரான்சிஸ் நேற்று முன்தினம் வைத்திய சாலையில் வைத்து காலமானதாக தெரிவிக்கப்படுகின்றது. நீரிழிவு நோயின் காரணமாக 73 வயதான பிரான்சிஸின் முழங்காலிற்கு கீழுள்ள பகுதிஅகற்றப்பட்டிருந்தது. சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நடுவர்களுக்கான செயற்குழுவின் உறுப்பினராக கந்தையா பிரான்சிஸ் விளங்கினார்.

1982 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 25 டெஸ்ட் போட்டிகளிலும், 1996 ஆம் ஆண்டு 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் உள்ளடங்கலாக 56 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் பிரான்சிஸ் நடுவராக கடமையாற்றியுள்ளார்.இலங்கை கிரிக்கெட் அணியின் முதலாவது டெஸ்ட் போட்டியான 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இவர் நடுவராக கடமையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தேசிய மட்ட மேசைப்பந்தாட்டம்
### சுதந்திரபுர ஜி.ரி.எம்.எஸ்.இற்கு இரு பதக்கங்கள்



(வவுனியா)

தேசிய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில் வவுனியா சுந்தரபுர ஜி.ரி.எம்.எஸ் வீரர்களான பொன்னுத்துரை சசிதரன் வெள்ளிப்பதக்கத்தையும், அஹஸ்ரன் றொக்ஸன் வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர்.

வெளசு யூனியர் தேசிய மேசைப்பந்தாட்ட போட்டி அண்மையில் அம்புஸ சிங்க றெஜிமேட் மேசைப்பந்தாட்ட உள்ளக அரங்கில் நடைபெற்றது.

வவுனியா சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ் பாடசாலையில் 150 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்பதுடன், இம்முறை வடமாகாண மட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மூன்று பிரிவு அணிகள் இறுதிப்போட்டிக்குள் நுழைந்து, அதில் இரண்டு பிரிவு அணிகள் சம்பியனாகியும், ஒரு பிரிவு அணி இரண்டாமிடமும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பரிசுகள், விருதுகள், பாராட்டுகள்...

(26.04.2013 - விளக்கு விருது வழங்கும் வைபவத்தில் எம்.ஏ.நுஃமான் ஆற்றிய ஏற்புரையிலிருந்து)

இது எனக்கொரு புது அனுபவம். இதுவரை இத்தகைய விருது விழாக்களில் விருதுபெறும் ஒருவனாக நான் இருந்ததில்லை. விருதுகளுக்கு எதிரான ஒரு மனநிலையில் இவ்வளவுகாலமும் இருந்து விட்டேன். இன்று இவ்விருதினைப் பெற்றுக்கொண்டு ஏற்புரையாக என்ன பேசுவது என்று யோசித்தேன். எழுத்தாளர்கள்: பரிசுகள், விருதுகள், பாராட்டுகள் பற்றியே பேசலாம் என்று நினைத்தேன்.

பரிசுகள் விருதுகள் பாராட்டுகள் எல்லாம் தமிழ்ச்சூழலில் மலினப்படுத்தப் பட்டிருப்பது போல் வேறு எங்கும் மலினப் படுத்தப்பட்டிருக்காது என்பது என் எண்ணம். பாராட்டு விழாக்களும் கௌரவிப்புகளும் அவற்றுக்குரிய அர்த்தத்தையும் மதிப்பையும் இழந்துவிட்டன. பொன்னாடைகள் பன்னாடைகளுக்குச் சமனாகிவிட்டன. அபத்தமான, அலங்காரமான பட்டங்கள் வழங்கப்படுவதும், அவற்றை நம்படைப்பாளிகள் பலர் ஆவலுடனும், ஆர்ப்பாட்டத்துடனும் சுமந்து திரிவதும் சுயமதிப்பீட்டின் வீழ்ச்சியையே நமக்கு உணர்த்துகின்றன. பரிசுகள், விருதுகளுக்காக நம் படைப்பாளிகள் பலர் படும் பாடுகளும், ஒவ்வொரு முறையும் இவை தொடர்பாக எழும் சர்ச்சைகளும் இவற்றை மதிப்பிறக்கம் செய்துவிட்டன.

இத்தகைய சூழலில் விருதுகள் எவையும் பெறாது இருப்பதே ஒரு எழுத்தாளனுக்குக் கௌரவம் என்ற கருத்து எனக்குள் உறுதியாகிவிட்டது. இந்த உறுதியுடனேயே, தவிர்க்க முடியாத இரண்டொரு சந்தர்ப்பங்களைத் தவிர, இவற்றை நான் புறக்கணித்து வந்திருக்கிறேன். இலக்கிய விழாக்களில் கௌரவிப்புக்கான அநேக அழைப்புகளை மறுதலித்திருக்கிறேன். அரச அல்லது தனியார் நிறுவனங்களின் பரிசுத் தேர்வுக்காக இதுவரை எனது நூல்கள் எவற்றையும் நான் அனுப்பியதில்லை.

எனக்குள் ஒளிந்து வாழும் எனது மனஅமைப்பும் இதற்கு ஒரு காரணம் என்று சொல்ல வேண்டும். எனது முதலாவது நூல் தவிர வேறு எதற்கும் நான் வெளியீட்டு விழாக்கள் செய்ததில்லை. எனது எழுத்துக்கள் மூலமாக அன்றி வேறுவகையில் எனது இருப்பை வெளிக்காட்ட நான் முயன்றதில்லை. அலுவலகத் தேவைகளுக்காக அன்றி, வேறு சந்தர்ப்பங்களில் எனது பெயருக்குமுன் கலாநிதி என்ற கல்விசார் பட்டத்தையோ, பேராசிரியர் என்ற பதவிப் பெயரையோ நான் பயன்படுத்தியதில்லை. இதை நான் ஒரு பெருமையாகச் சொல்லவில்லை, இதுவே என் இயல்பாக இருந்திருக்கிறது. நான் என்ன எழுதுகிறேன், என்னைப்பற்றிப் பிறர் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதையெல்லாம், தாங்களாக அறிந்து கொண்டாலன்றி, எனது மனைவி, மக்களுக்குக் கூட நான் சொல்வதில்லை. இன்று வரை அதில் எனக்கு ஒரு கூச்சம் இருக்கிறது. ஒரு நல்ல கவிதை எழுதியிருக்கிறேன், ஒரு நல்ல கட்டுரை எழுதியிருக்கிறேன் என்று சொல்லும் தற்துணிபு இன்று வரை எனக்குச் சித்திக்கவில்லை. என் எழுத்துக்களின் தரம் பற்றி எனக்கு எப்போதும் சந்தேகம் உண்டு.

இத்தகைய மன அமைப்புடைய ஒருவனுக்குத்தான் இவ்வாண்டு விளக்கு விருது அறிவிக்கப்பட்டது. பலவகையில் இது என்னை மிகுந்த சங்கடத்துள் ஆழ்த்திய அறிவிப்பு. இதை எவ்வாறு எதிர்கொள்வது என பல நாட்கள் யோசித்தேன்.

இந்த விருதை ஏற்றுக் கொள்ள மறுத்தால் இது வரை விருதுபெற்ற படைப்பாளிகளை அவமதித்து விடுவேனோ என்ற தயக்கம் எனக்கு இருந்தது. அதேவேளை விருதுகள் பெறாதிருப்பதே ஒரு எழுத்தாளனுக்குக் கௌரவம் என்ற என் நிலைப்பாட்டை விட்டுக் கொடுப்பதும் சங்கடமாக இருந்தது. இதை ஏற்றுக்கொள்வதனால் கிடைக்கும் பாராட்டு சங்கோசத்தை ஏற்படுத்தியது.

என்னைப் பற்றி எனக்கு ஒரு சுயமதிப்பீடு உண்டு. அது எனக்குச் சாதகமானது அல்ல. 68 வயதுவரை ஆரோக்கியமாகவும், சற்றுப் பொருளாதார வசதியுடனும் வாழக் கிடைத்திருக்கிறது எனக்கு. இந்த நீண்ட வாழ்க்கையில் எழுத்துத்துறையில் என் சாதனைகள் என்ன? இதுவரை முப்பது நூல்கள் வெளியிட்டிருக்கிறேன், இன்னும் பத்து நூல்கள் அளவுக்கான ஆக்கங்கள் என் கோப்புகளில் உள்ளன



என்பது எனக்குத் திருப்தி தருவதாக இல்லை. என்னைப் பொறுத்தவரை எண்ணிக்கை ஒரு பொருட்டே அல்ல. 40 வயதுக்குள் தங்கள் வாழ்வை முடித்துக்கொண்ட பாரதி, புதுமைப்பித்தன் சாதனைகளுடன் ஒப்பிடும்போது நான் எங்கு நிற்கிறேன் என்பது எனக்கு முக்கியமாகப்படுகின்றது. அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்க யாரும் இருக்கவில்லை. பரிசுகளையும் விருதுகளையும் எதிர்பாராமலேயே, பஞ்சத்தோடும், பட்டினியோடும் வாழ்ந்து பெரும் சாதனைகள் படைத்தவர்கள் அவர்கள். நமது அதிஷ்டமோ, துரதிஷ்டமோ, நமக்குப் பரிசுகளும், விருதுகளும் பாராட்டுகளும் வழங்கிக் கௌரவிக்க இன்று ஏராளமான அமைப்புகள் உள்ளன. அவைதான் இல்லாவிட்டாலும், நாமே ஒரு இணையத்தை, ஒரு பத்திரிகையைத் தொடங்கி நம்மைச் சுற்றி ஒரு ஒளிவட்டத்தைச் சுழலவிடும் வாய்ப்புகள் இன்று நமக்கு உள்ளன.

இன்றுவரை நான் எனக்கென்று ஒரு இணைய தளத்தை உருவாக்கிக் கொள்ளவில்லை. படைப்பிலக்கியத் துறையில் 1960 - 70கள்தான் எனது வளமான காலம். 1980இற்குப் பின்னர் நான் 100 கவிதைகள்கூட எழுதியிருக்கமாட்டேன். ஆராய்ச்சி, விமர்சனம், மொழிபெயர்ப்புத் துறைகளில் நான் சிறிது பங்களிப்புச் செய்திருக்கிறேன். ஆனால் அவை போதுமானவை அல்ல என்பது என் கணிப்பு. நான் செய்திருக்கக்கூடியவற்றுள் பத்தில் ஒரு பங்குதானும் நான் செய்யவில்லை என்பது என்னைப் பற்றிய எனது குற்றச்சாட்டு. "இன்னும் பத்து ஆண்டுகள் வாழக் கிடைத்தால் ஏதேனும் சாதிக்கலாம்" என மூன்றாவது மனிதன் சஞ்சிகைக்கு அளித்த ஒரு நேர்காணலில் நான் குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறு சொல்லி சுமார் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் திருப்தியுறும் அளவுக்கு, குறிப்பிடும்படி ஒன்றும் சாதிக்கவில்லை. நான் இன்னும் பத்து ஆண்டுகள் வாழ்வதற்கான வாய்ப்பு சந்தேகத்துக்குரியது. வாழ்ந்தாலும் எழுதுவதற்கான ஆரோக்கியம் இருக்குமா என்பதும் ஐயத்துக்குரியது. அவ்வகையில் இவ்வளவுதான் நான் என்று அமைதி காண்பதைத் தவிர எனக்கு வேறுவழி இல்லை.


## சினிமா சினிமா

▶ சர்வர் சுந்தரம் என்ற நாடகத்தில், மேசை துடைக்கும் கிளீனராக, ஒரு பையன் வரவேண்டியிருந்தது. "எச்சில் இலை எடுக்கும் வேஷத்தைக் கொடுக்கிறீர்களே..." என்று, அந்த வேடம் போடும் பையன், வருத்தப்படுவானோ என்ற எண்ணத்தில், அவ்வேடத்தை நாடகத்தில் நானே போட்டேன். வசனமே இல்லாத வேடம். அந்தக் கிளீனர், மேசையைத் துடைக்கும் முறையைப் பார்த்து, நாகேஷ் கிண்டல் செய்வது தான் காட்சி. இந்த கிளீனர் வேடத்தை, சர்வர் சுந்தரம் படத்திலும் நானே செய்ய வேண்டுமென்று டைரக்டர் பஞ்சு விரும்பினார். நடித்தேன். ஆனால், படத்தின் இறுதித் தொகுப்பின் போது, இக்காட்சியை டைரக்டர் பஞ்சு வெட்டி விட்டார். என்னை வற்புறுத்தி நடிக்க வைத்த டைரக்டரே, கடைசியில் இந்தக் காட்சியை வெட்டி எறிந்து விட்டார். எனக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. கதையின் வேகத்தை மனதில் வைத்து, இக்காட்சி தேவையில்லை என்று வெட்டி விட்டார். அன்றைக்கு அந்தக் காட்சியை எடுத்த போது, வருத்தப்பட்ட நானே, இன்று இயக்குனர் என்ற முறையில், அதே போல பல விஷயங்களை வெட்ட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.


- இயக்குனர் கே.பாலசந்தர்



▶ ஐ.பி.எல்., கிரிக்கெட் சூதாட்டத்தில், போலிஸாரால் கைது செய்யப்பட்ட ஸ்ரீசாந்துக்கு குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஏழு ஆண்டு வரை சிறைத் தண்டனை கிடைக்கும். இந்தப் பிரச்சினையை மையப்படுத்தி, மலையாளத்தில், "கிரிக்கெட்" என்றொரு படம் தயாராகிறது. ஷாஜி கைலாஷ் தயாரிக்கும் இப்படத்தில், ஸ்ரீசாந்த் வேடத்தில் நடிக்க, நடிகர் தேர்வு நடந்து வருகிறது.













▶ வெப்பம் மற்றும் 180 ஆகிய படங்களில், நித்யா மேனன் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, இப்போது கதாநாயகியாகவும் நடித்து வருகிறார். பாடவும் செய்வாராம். தெலுங்கு, கன்னடம், மலையாளம் என, மூன்று மொழிகளிலும் இதுவரை, 10க்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ள நித்யா மேனன், தமிழில் பாட சான்ஸ் தருமாறு, பிரபல இசையமைப்பாளர்களை கேட்டு வருகிறார்.

▶ சுந்தரபாண்டியன் வெற்றியைத் தொடர்ந்து, நகர தாதாக்களுக்குப் பதிலாக கிராமத்துப் பாண்டியர்களுக்கே மவுசு. விஷால் நடித்துவரும் "பாண்டிய நாடு", அமீர் நடிக்கும் படமான "புலி பாண்டியன்", விதார்த் நடிக்கும், "பட்டைய கிளப்புடா பாண்டியா" ஆகியவை மதுரையை மையமாக வைத்து எடுக்கப்பட்டு வருகின்றன.

▶ இரண்டு ஆண்டு வனவாசத்துக்கு பிறகு வடிவேலு நடித்து வரும் கஜபுஜ புஜபல தெனாலிராமன் படத்தில், அவருக்கு ஜோடியாக நடிக்க பார்வதி ஓமனக்குட்டன், சினேகா உல்லால் என பல நடிகைகளும் மறுத்துவிட்ட நிலையில், ஒருவழியாக இப்போது மீனாட்சி தீட்ஷித் என்ற நடிகை ஓ.கே. சொல்லியிருக்கிறார். இந்த மீனாட்சி, விஜயகாந்தின் விருதகிரி படத்தில் மூன்று நாயகிகளில் ஒருவராக நடித்தவர்.

▶ "வானத்தைப் போல படத்துக்குப் பின் நிறைய தயாரிப்பாளர்கள் வந்தார்கள். ஆனால் ஸ்டார் நடிகர்களுக்கான கதைதான் அவர்களுக்குத் தேவையாக இருந்தது. அதில் எனக்கு பெரிய ஈடுபாடு இல்லை. 15 படங்களை இயக்கிவிட்டேன். ஆனால் கொடுக்க நினைத்த சினிமாவை இன்னும் எடுக்கவில்லை. எதுவுமே சாதிக்கவில்லை எனத் தோன்றுகிறது. வியாபரத்துக்காக சில சமரசங்கள் வேண்டியிருந்தது. எத்தனை கதை, இயக்குநர்கள் வந்து போனாலும், இன்றைக்கும் மகேந்திரன் சாரின் "உதிரிப்பூக்கள்" பார்த்து பரவசம் அடைகிறோம். அந்த பரவச உணர்வை நானும் ஏற்படுத்த வேண்டும் என்று தோன்றுகிறது. "வானத்தைப் போல" அப்படி வந்திருக்க வேண்டிய படம்தான். விஜயகாந்த் இடத்தில் ஜனகராஜ் இருந்திருக்க வேண்டும். விஜயகாந்தும் இருந்திருக்க

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

12

- டாக்டர்.பிரகாஷ் -

**மொழி வளர்ச்சி மற்றும் குழந்தைப் பருவக் கற்றல்:**

குழந்தைகளுக்கு மொழி வளர்ச்சி என்பது, ஏறக்குறைய இந்த வரிசையில் நடைபெறுகிறது.

- அழுவது, சத்தமிடுவது, தோராயமாக ஓசை எழுப்புவது
- உளறுவது, இரண்டு/மூன்று முறை அதே ஒலியை திரும்பச் செய்வது - 3 மாதங்கள்
- கவனிக்கும் திறன் - 8 மாதங்கள்
- வார்த்தைகளைப் புரிந்து கொள்வது, ஒரு சொல் பேச்சு - 1 வயதில்
- இரண்டு வார்த்தைகளை/தந்தி வார்த்தைகளை சொல்வது - 2 வயதில்
- மொழி இலக்கணம் கற்றல்

மொழி வளர்ச்சிக்கும், குழந்தைப் பருவக் கற்றலை வளர்க்கவும் உதவும் விளையாட்டுகள்:

**டெமோ ரேப்: (வயது: 6 வாரங்களுக்கு மேல்)**

குழந்தையின் சப்தங்களை தேதியிட்டு ரேப் றெக்கோடரிலோ, செல்போனிலோ றெக்கோர்ட் செய்யவும். இது குழந்தையின் மொழி வளர்ச்சியின் முன்னேற்றங்களை நாம் எளிதில் உணர வகை செய்யும்.

**மற்றவர் குரலை பின்பற்றுதல்: (வயது: 3 மாதங்களுக்கு மேல்)**

உங்கள் குழந்தை ஒலி எழுப்புகையில், நீங்களும் அதே ஒலியை தொடர்ந்து எழுப்பவும். பின்பு, நீங்கள் அதே ஒலியை மீண்டும் எழுப்பி, குழந்தை எதிர்வினை புரிய, ஒரு இடைவெளி தரவும். இந்தச் செய்கையானது, குழந்தைகள் அடிப் படை மொழித் திறன்களைப் பழகவும், ஒலியைக் கொண்டு மற்றவர்களுடன் உரையாடவும் இது கற்றுத் தருகிறது.

**கரடி பொம்மை எங்கே? (வயது: 6 மாதங்களுக்கு மேல்)**

குழந்தை நன்கறிந்த பந்து, மற்ற பொம்மைகள், கரடி பொம்மை எல்லாவற்றையும் அவைகளைக் குறிப்பிட்டு, குழந்தையை அடையாளம் காணச் செய்யவும். சரியாகக் காட்டியவுடன், கை தட்டி உற்சாகப் படுத்தவும். இந்த விளையாட்டில் இருந்து, தெரிந்த நபர்கள், பொருட்களை இனங்கண்டறிந்து அவைகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம், சமூக இணைப்புகள் (social ties) பற்றிக் கற்றுக் கொள்கின்றனர்.

**குழல் வழியே பேசுதல் (வயது: 10 மாதங்களுக்கு மேல்)**

ரியூப் போன்ற குழல் வழியாக சற்று பலமான மற்றும், மெதுவான ஒலியை எழுப்புதல். இதை கவனிப்பதன் மூலம், வெவ்வேறு வகையான ஒலி களை எழுப்புவது மற்றும் ஒலியைப் பயன்படுத்து வதைப் பற்றியும் குழந்தை கற்றுக் கொள்கிறது

**மூக்கு எங்கே இருக்கு? கால் எங்கே இருக்கு? (வயது: 10 மாதங்களுக்கு மேல்)**

குழந்தையின் பல்வேறு உடல் பாகங்களான மூக்கு, கண், வாய், காது, கால் பற்றிக் கேட்கவும். குழந்தை பல்வேறு சொற்களைப் பற்றிக் கற்றுக் கொள்ளவும், சரியாக அடையாளம் சொல்வதால், அதன் சுய மதிப்பும் கூடி, இது போன்ற விளையாட்டுகளில் மேலும் ஆர்வம் அதிகரிக்கும்.

**எடுத்து வைக்க உதவு: (வயது: 12 மாதங்களுக்கு மேல்)**

கடைக்குப் போய் வாங்கி வந்த சாமான்களை, காய்கறிகளை ஒவ்வொன்றாக அவைகளின் பெயர்களைச் சொல்லி எடுத்து வைக்கவும். பின் அந்தச் சாமான்களின் பெயரைச் சொல்லி, குழந்தையை சரியாக எடுத்து மீண்டும் பையில் போடச்சொல்லவும்.

இதன் மூலம் புதிய புதிய சாமான்க ளின் பெயர்களைக் கற்றுக் கொள்வதோ டல்லாமல், குழந்தை, ஒரு செயலை இன்னொருவருடன் சேர்ந்து செய்யும் இயல்பு பற்றியும் அறிந்து கொள்கிறது.

**விலங்குகள் மிமிக்ரி: (வயது: 12 மாதங்களுக்கு மேல்)**

விலங்குகளின் படங்களைப் புத்தகத் திலோ அல்லது வரைந்தோ காட்டி, அவை களைப் போல சப்தமிடவும். குழந்தை இதை நன்கு ரசித்து மகிழ்வான்/ள். மொழியைக் கேளிக்கையாக (fun) கற்றுக் கொள்வது துவங்குகிறது.

**செல்லக் குட்டி சொல் புத்தகம்: (வயது: 12 மாதங்களுக்கு மேல்)**

உங்கள் குழந்தை என்னென்ன சொற்களைச் சொல்கிறானோ, அதன் படங்களைக் கத்தரித்து ஒரு பேப்பரில் ஒட்டவும். மீண்டும் மீண்டும் அந்தப் படங்களைக் காட்டி அவனை சொல்ல வைப்பது, அவனுக்குப் பயிற்சியையும், சரியாகச் சொல்வதால், மிகுந்த மன மகிழ்ச்சியையும் தரும்.

**போட்டோ எக்ஸ்பீரியன்ஸ் புத்தகம்: (வயது: 18 மாதங்களுக்கு மேல்)**

குழந்தையை பூங்காவிற்கு அழைத்துச் செல்கையில் ஒவ்வொரு விளையாட்டின் போதும் புகைப்படங்கள் எடுக்கவும். அவைகளை ஒரு கொப்பியில் ஒட்டி, குழந்தையை அருகில் வைத்துக் கொண்டு, அந்தப் படத்தைக் காட்டி அவ(ள்)ன் என்ன செயல் செய்கிறா(ள்)ன் என்று கதை போல சொல்லவும். போட்டோவைக் காட்டி நீங்கள் கூறும் ஒவ்வொரு மொழி வளமும் (vocabulary), குழந்தைக்கு மிகுந்த அர்த்தமுள்ளதாக விளங்கும். ஏனென்றால், அவைகளை குழந்தையே உணர்ந்து அனுபவித்து இருக்கிறது. ஒவ்வொரு புகைப்படமும், குழந்தை ஏற்கெனவே செய்த செயலின் ஒரு அடை யாளமாக இருக்கிறது. குழந்தைகளின் சுயமதிப்பு இதன் மூலம் கூடவும், வாசிப்பு அனுபவத்திற்கான மிகச்சிறந்த முன்னோட்டமாக இந்த விளையாட்டு திகழ்கிறது.



(தொடரும்)


---

வண்டும். எல்லாமே மாறி
ிட்டது. தமிழர்களின் வரலாற்றை
முழுமைப்படுத்தும் ஒரு கதை
ருக்கிறது. அதை கனவு என்று
சால்லலாம். நிறைவேறும் என்று
த்திருக்கிறேன்."
- இயக்குனர் விக்கிரமன்

ஹிந்தி நடிகர் ரிதேஷ்
தஷ்முக்கை திருமணம் செய்து
டிப்புக்கு முழுக்கு போட்ட
ஜனிலியா, முழு நேர குடும்பத்
லைவியாகி விட்டார். ரிதேஷ்
தஷ்முக் எங்கு ஷூட்டிங் சென்றாலும்
ப்பாட்டு கட்டிக் கொண்டு அந்த
டத்துக்குச் செல்கிறார். கணவருக்கு
ட்டுமில்லாமல், பட யூனிட்டில்
ணியாற்றும் எல்லோருக்கும்
ருந்து பரிமாறுவதுதான் இப்போது
ஜனிலியா வேலை.

ஹால் பெர்ரி, ஜேம்ஸ் பொண்ட்
டங்களில் நடித்து ஹொலிவுட்டில்
ரபலமானவர். ஒஸ்கார் விருதும்
பற்றுள்ள, பெர்ரிக்கு, 46 வயது.
ப்போது கர்ப்பமாக இருக்கிறார்.
டங்கள் இளமை ரகசியம் என்ன"
ன, பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு,
னக்கிருக்கும் நீரிழிவு நோய்தான்,
ன் இளமை ரகசியத்துக்கு காரணம்"
ன்று போடாகப் போடுகிறார். "இளம்
பதிலேயே, எனக்கு நீரிழிவு
நாய் வந்து விட்டது. இதனால்,
ணவு விஷயத்தில் கட்டுப்பாடுகளை
டைப்பிடிக்கத் தொடங்கினேன்.
ளவாக சாப்பிட்டு, உடலையும்,
ட்டுக்கோப்பாக வைத்துக்
காண்டேன். 46 வயதிலும், என்னால்,
ர்ப்பமாக முடிகிறது என்றால்,
தற்கு, நீரிழிவுக்குத் தான் நான்
ன்றி கூற வேண்டும்" என்கிறார்
ால் பெர்ரி.

---




# டொப்ளர்!

நம் வண்டியின் ஸ்பீடோ மீற்றரைப் பார்க்காமலேயே போக்குவரத்துப் பொலிஸார் ஓவர் ஸ்பீட் என்று அபராதம் கட்டச் சொல்வது எப்படி? நாம் போகும் வேகத்தை தூரத்திலிருந்தே அவர்கள் எப்படிக் கணிக்கின்றனர்? இந்த இடத்தில்தான் "டொப்ளர் விளைவு" என்ற ஒப்பற்ற அறி வியல் அடிப்படை உதவுகிறது. அந்த அடிப்படையை ஆராய்ந்து உலகுக்குத் தந்தவர் ஆஸ்திரிய அறிவியல் மேதை கிறிஸ்டியன் டொப்ளர் (Christian Andreas Doppler). ஆஸ்திரியாவின் சோல்ஸ்பேர்க் நகரில் 1803ஆம் ஆண்டு நவம்பர் 29 பிறந்தவர் டொப்ளர். இவர் தந்தை, கல் உடைக்கும் தொழிலாளி. இளவயதில் நோஞ்சான் குழந்தையாக இருந்ததால், தந்தையின் தொழிலிலிருந்து தப்பித்தார் டொப்ளர். பள்ளிக்கூடக் கல்வியை முடித்து, வியன்னாவிலும் சோல்ஸ்பேர்கிலும் வானியல் மற்றும் கணிதத்தைக் கற்றுத் தேர்ந்தார்.

அறிவியலில் அன்று ஆராயப்படாத துறைகள் அதிகம் இருக்க, அசையும் பொருள்கள் வெளிவிடும் ஒளியைப் பற்றி அதிகம் சிந்தித்தார் டொப்ளர். பைனரி ஸ்டார்ஸ் எனப்படும் இரட்டை விண்மீன்கள் வண்ண வண்ண ஒளியை வெளியிடுவது ஏன் என்பது பற்றி ஆராய்ந்து, தனது 39ஆவது வயதில் ஓர் ஆய்வை அவர் வெளியிட்டார்.

ஒளியைப் பற்றி சிந்தித்த டொப்ளர், ஒலியின் பக்கமும் திரும்பினார். மிக சத்தமாக பாட்டு இசைத்துக் கொண்டே நெடுஞ்சாலையில் ஒரு கார் பறக்கிறதென்று வையுங்கள். அது நம் காதுகளுக்கு அனுப்பும் ஒலி அலை, தூரத்துக்குத் தக்கபடி, அந்தக் கார் பயணிக்கும் வேகத்துக்குத் தக்கபடி மாறுகிறதல்லவா? இந்தச் சிறு மாறுபாடுதான் டொப்ளர் எஃபெக்ட்.

இந்த ஒலி அலை மாறுபாட்டை வைத்தே தூரத்தில் செல்லும் ஒரு வாகனம் எவ்வளவு வேகத்தில் போகி றது, அது என்ன எடை கொண்ட வாகனம், எவ்வளவு உயரம் என எல்லாவற்றையும் கணக்கிட முடிந்தது டொப்ளரால். போக்குவரத்துப் பொலிசாருக்கு மட்டுமல்ல... இராணுவக் களங்களில் எதிரியின் விமானம் அல்லது ஏவுகணை தம்மை நெருங்குவதை அறிந்து விழித்துக் கொள்ளவும் இந்த டொப்ளர் விளைவுதான் கைகொடுக்கிறது. இந்த ஒப்பற்ற கண்டுபிடிப்பு மட்டுமின்றி, கணிதம், இயற்பியல், இயந்திரவியல், வானியல் சார்ந்த 50இற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி வெளியிட்ட டொப்ளர், வியன்னா பல்கலைக்கழகத்தின் ஆய்வு நிறுவனத் தலைவராகவும் உயர்ந்தார்.



சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்ட டொப்ளர், 1853ஆம் ஆண்டு தனது 49ஆவது வயதில் மரணமடைந்தார். விண்ணியலைத் தவிரவும் 12 அறிவியல் துறைகளில் அடிப்படையாக இருக்கும் டொப்ளரின் கண்டுபிடிப்பு, கண்டுபிடிப்புகளில் எல்லாம் "ரொப்" என்று அடித்துச் சொல்லலாம்!

# இசைபட வாழ்...

■ குமரன் கிருஷ்ணன்

நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு நிகழ்வும் காலம் வரையும் ஓவியம் என்று சொல்லலாம் இல்லையா? ஒரு முறை வரைந்த ஓவியத்தை, காலம் பெரும்பாலும் மறுபடி வரைவதே இல்லை. மறுமுறை வரைந்தாலும் அதன் "வண்ணம்" முன்னர் வரையப்பட்ட ஓவியத்தின் வண்ணம் போல் இருப்பதே இல்லை. காலம் வரைந்த அத்தகைய ஓவியங்களை நாம் மீண்டும் மீண்டும் துடைத்து வாழ்க்கைச் சுவரில் அடிக்கப்பட்ட வயதின் ஆணியில் மாட்டுவதுதான் நினைவு என்பதோ?

ஒரு பாடல் எப்பொழுது, எப்படி நம் மனதுக்குள் இறங்குகிறது? இந்த உலகை நிர்வகிக்கும் காலத்தின் ரகசியங்களில் இதுவும் ஒன்றோ? ஏதோ ஒரு நிகழ்வில் ஒரு பாடல் முழுதுமோ அல்லது அதன் ஒரு துளியோ நம் காதில் விழுகிறது. அதை நாம் கேட்ட நொடியில், பிறகு பலமுறை கேட்கும் நொடிகள் உரசி உரசி காலத்தின் இழை பாடலுக்குள் நுழைந்து மேலும் மேலும் நினைவு-களை கோர்த்துக் கொண்டே போகிறது இல்லையா? இதில் மனதுக்குள் இறங்கிய நொடி என்று எதை அடையாளப்படுத்துவது?



நான் பி.எஸ்.சி. படித்துக் கொண்டிருந்தபொழுது, பார்வையற்றோர் எழுதும் பரீட்சைக்கு எங்கள் கல்லூரி மூலம் சென்றிருந்தேன். அவர்கள் விடை சொல்லச் சொல்ல நாம் எழுத வேண்டும். செந்தில் குமார் என்பவருக்காக பரீட்சை எழுத நான் அவர் அருகில் அமர்ந்தேன். அவர், பிறந்த பொழுதிலிருந்து மனதின் மூலமே உலகைப் பார்த்து வளர்ந்தவர்.

செந்தில் குமார் என்னிடம் பேசிய முதல் வரி, "நான் சொல்வதை மட்டும்தான் எழுதவேண்டும். எனக்கு உதவுகிறேன் என்று நீங்களாக எதுவும் எழுதுவது எனக்கு பிடிக்காது". எனக்கு அவரை உடனே பிடிக்கத் துவங்கியது. இவரின் ஒன்பது பரீட்சைகளை இரண்டாண்டுகள் நான் எழுதினேன். பரீட்சை முடிந்து, அந்த வேப்பமரம் நிறைந்த, வேப்பம்பழங்கள் இறைந்த சாலை வழியே நாங்கள் பேருந்து நிறுத்தம்வரை நடந்து வருவோம். சரியான இடங்களில், தேவைக்கு ஏற்றவாறு வளைந்து, மேடுபள்ளங்களில் சரியாக கால் வைக்கும் அவரின் புலன்களின் நுண்ணறிவு என்னை வியக்க வைக்கும். இவர், பெரும்பாலும் ஏதேனும் ஒரு பாடலை "ஹம்" செய்வார். அதில் பெரும்பான்மை இளையராஜாவுடையதாக இருக்கும்.

அப்படிப்பட்ட தேர்வு முடிந்த வெயில் நிறைந்த மதிய வேளை ஒன்றில்தான் அவர் "ஊரெல்லாம் உன் பாட்டுதான்" - முணுமுணுத்தபடி மூன்றாக மடித்திருந்த தன் ஊன்றுகோலை பிரித்து நீட்டிக் கொண்டிருந்தார். இந்தப் பாடல் மூன்று பேரால், மூன்று வெவ்வேறு இசைத் தளங்களில், மூன்று முறை பாடப்படும். இந்த மூன்றும் மூன்று வெவ்வேறான உணர்வின் ரேகைகளை மனதில் வரையக்கூடியவை. எனக்கு இரண்டாம் ஸ்டான்ஸாவில் வரும் வயலின் மீது ஒரு அதீத பிடிப்பு. இளையராஜா பாடும் வேர்ஷன் ஒரு ஸ்டான்ஸா மட்டுமே கொண்டது என்றாலும் அதிலும் இந்த வயலின் கோர்வை வரும்.

இசைக் கல்லூரியில் பயிலும் அவரிடம் இந்தப் பாட்டின் இரண்டாம் ஸ்டான்ஸா வயலின் எவ்வளவு அற்புதமாக இருக்கிறது அதை உங்கள் புல்லாங்குழலில் வாசியுங்களேன் என்றேன். லேசாக சிரித்தபடி தன் ஜோல்னா பையை தடவிக்கொண்டார். அதனுள் உறங்கிக் கொண்டிருந்த குழலை எழுப்பினாரோ என்னவோ..

சற்று தூரம் நடந்தபின், அடிவேர்கள் பரந்திருந்த ஆல மரத்தின் அடியிலிருந்த சிமெந்துத் திட்டில் அமர்ந்து



ஒரு பாடல் எப்பொழுது, எப்படி நம் மனதுக்குள் இறங்குகிறது? இந்த உலகை நிர்வகிக்கும் காலத்தின் ரகசியங்களில் இதுவும் ஒன்றோ? ஏதோ ஒரு நிகழ்வில் ஒரு பாடல் முழுதுமோ அல்லது அதன் ஒரு துளியோ நம் காதில் விழுகிறது. அதை நாம் கேட்ட நொடியில், பிறகு பலமுறை கேட்கும் நொடிகள் உரசி உரசி காலத்தின் இழை பாடலுக்குள் நுழைந்து மேலும் மேலும் நினைவுகளை கோர்த்துக் கொண்டே போகிறது இல்லையா? இதில் மனதுக்குள் இறங்கிய நொடி என்று எதை அடையாளப்படுத்துவது?

புல்லாங்குழலை வெளியில் எடுத்தார். காலத்தின் துளைகளில் நினைவை இட்டு நிரப்பக் காத்திருந்தது போல பேசாமல் இருந்தது அந்த புல்லாங்குழல். பெருகி வரும் காட்டருவியின் நீர் பிரிந்து, சிற்றோடை போல இரு கரைகளிலும் இருக்கும் சிறு சிறு பாறைகளின் நடுவே கால-காலமாக வழிந்தோடி வழிந்தோடி, பச்சை பூத்து ஒரு வாசம் வீசுமே.. அந்த சூழலையும் அந்த வாசனையையும் நுகரும்பொழுது ஒரு உணர்வு தோன்றுமே...அதைப் போன்றதொரு உணர்வை பீறிட்டு கிளப்பியது அவர் வாசித்த "ஊரெல்லாம் உன் பாட்டு".

அந்த இரண்டாம் ஸ்டான்ஸா துவக்கத்தில் வரும் வயலின் நடுவே, வயலினை வைத்தே ஒரு ஒற்றை ஸ்ட்ரோக் போட்டிருப்பார் இளையராஜா"அதை அப்படியே புல்லாங்குழலில், ஒரு காலத்துகளுக்குள் நினைவின் ஒரு சொட்டைத் தொட்டு எடுப்பது போல், குழலின் துளையில் விரலை வைத்தெடுத்து வாசித்தார் செந்தில் குமார். பாடலின் ஒரு மிக அற்புதமான நொடிக்குள் நம்மைத் தூக்கியெறியும் அந்த வயலின் நொடிகள்"ஒருவேளை அந்த இரண்டாம் ஸ்டான்ஸாவில் முழுவதுமே புல்லாங்குழலை வைத்திருக்கலாமோ இளையராஜா என்றேன் நான். இந்தப் பாடலில் வரும் கப்பாஸில் ஒரு மாயம் இருக்கிறது. நதியோ, அருவியோ ஏதோ ஒரு நீரோட்டத்தில் கால்களை ஆட்டியபடி இந்தப் பாடலை கேட்டுப் பாருங்கள். எத்தனை வேறுபட்டவேகத்தில் கால்கள் ஆடத்துவங்கினாலும், பாடல் செல்ல செல்ல, தானாகவே



அந்த கப்பாஸ் ஒலிக்கும் இடைவெளியின் லயத்திற்கேற்றவாறே நம் கால்கள் நீரில் அலையத்துவங்கும்!

செந்தில் குமார் அன்று "ஊரெல்லாம் உன் பாட்டுதான்" பாடலை குழலில் வடித்தபின், "உங்களுக்கு இந்தப் பாட்டில் எந்த வரி பிடிக்கும்?" என்றார். "ஆலம் விழுதுகள் போலே ஆடும் நினைவு-கள் கோடி" என்றேன். சூழலுக்கு பொருத்தமாக நாங்கள் அமர்ந்திருந்த ஆலமரமும், தனது மகிழ்ச்சியை காட்டுவது போல் விழுதுகளை லேசாக அசைத்தபடி இருந்தது. அந்த வரியை ஒருமுறை பாடிப் பார்த்த அவர், "நீங்கள் நினைவு-களை விழுது போல பார்க்கிறீர்கள். நாங்கள் விழுதை நினைவாக பார்க்கிறோம்." என்றார். நாக்கின் மேல் கல்லை வைத்தது போல நகர்த்த முடியாத வார்த்தைகளுடன் நின்றேன் நான்.

மூன்றுவிதமாக பாடப்படும், மூன்று முறை வரும் இந்தப் பாடலில் ஒரே ஒரு சொல் மட்டுமே மாறுபடும். நினைவுகள் (நினைவுகளினால்?) வாடுவதற்கும் வாழ்வதற்கும் உண்டான வித்தியாசமே அது.

ஸ்வர்ணலதா பாடுவதில், உள்ளத்தில் ஆடும் உணர்வின் அண்மையும், ஜேசுதாஸ் பாடுவதில், நழுவிக் கொண்டிருக்கும் உணர்வில் நாட்டம் கொள்ளும் தன்மையும், இளையராஜா பாடுவதில் ஒன்றில் ஒட்டியிருந்தும் எட்டி நிற்கும் பன்மையும் வெளிப்படும். அதற்கு அச்சாரம் போடுவது போல, பாடலின் துவக்கத்தில் வரும் கிடார் ஸ்வர்ணலதாவுடனும் ஜேசுதாசுடனும் வெவ்வேறு "கனம்" தாங்கித் துவங்கும். இளையராஜாவிடம் இந்தத் துவக்கமே இராது.

இந்த உணர்வுகளின் திரியை பிரித்துக் காட்டும்விதமாக, மூன்று பேரின் பாடல்களிலும் இசையின் அமைப்பு ஆங்காங்கே வேறுபடும்.

ஸ்வர்ணலதா மற்றும் ஜேசுதாஸ் பாடும் இரண்டு பாடல்களிலும், சரணங்களின் வரிகளுக்கு அடியிலும் இடையிலும் வயலின் அமைதி காத்து, "பாதச்சுவடுகள் போகும்" மற்றும் "ஆலம் விழுதுகள் போலே" ஆகிய வரிகளுக்கு முன் மீண்டும் தலை தூக்கி, இரண்டே வரிகளில் அடங்கி விடும்.

இளையராஜா பாடுவதைக் கேளுங்கள்... ஒரே சரணம்தான். அந்த சரணத்தின் துவக்கத்தில் வருவதும் மற்ற இருவர் பாடுகையில் வரும் அதே வயலின்தான். ஆனால் இப்போது புல்லாங்குழல் என்னும் "பாத்திரம்" வயலினிலிருந்து வழியும் உணர்வை, அதே வடிவில் தேக்கி வைத்துக்கொள்ள உடன் வருகிறது!

ஒரு அகலமான சாலையில் நாம் பயணம் செய்யும்பொழுது, ஒரு கீறலாக கிளம்பி, எங்கோ நீண்டு கொண்டு போகும் ஒற்றையடிப் பாதைகள் போல, அந்த பாதை எங்கு போகுமோ என்று நம்மை நினைக்க வைப்பது போல, ஒவ்வொரு வரியின் முடிவிலும் புல்லாங்குழல் நீண்டு புரள்கிறது...மற்ற இருவர் பாடுகையில் "ஆலம் விழுதுகள் போலே" வரிகளின் வேரில் பொங்கி வழியும் வயலின், இளையராஜாவின் ஆலம் விழுதில் அமைதியாகிமறைந்து விடும்! அந்த அமைதியின் ஆழத்தை மேலும் தோண்ட முயல்கிறது தபேலா. அதில் சிதறும் நினைவை கொத்தியெடுத்து நம் மீதே மீண்டும் பூசுகிறது அதனுடன் வரும் கப்பாஸ். அவ்வாறு மறைந்து போன அதே வயலின்,அந்த இரண்டு வரிகள் முடிந்தபின் மீண்டு வந்து காற்றில் நீந்துவது மற்ற இருவரின் அதே வரிகளில் கிடையாது!

செந்தில் குமார் வாசித்த புல்லாங்குழலின் வழியே காலம் வரைந்து போன அந்த மதியம் கடந்து சுமார் ஐந்து ஆண்டுகள் கழித்து, ஒரு நாள் மாலை நான் பேருந்தில் வந்து கொண்டிருந்தேன். பஸ் நிறுத்தம் அருகில் அவரைப் போன்ற ஒருவர், ஒரு பெண்மணியுடன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. நான் பேருந்திலிருந்து இறங்கி, அவர் அருகே சென்று "நீங்கள் செந்தில் குமார் தானே"... என்றேன். எனக்கு இருந்த சிறிதளவு சந்தேகம்கூட இல்லாமல் "என்ன குமரன் எப்படி இருக்கீங்க" என்றார் தாமதமின்றி. அவரின் மனைவியை அறிமுகப்படுத்தி, இருவருமே இசைப்பள்ளியில் பணி புரிவதாக சொன்னார். செந்தில்குமாருக்கு இந்தப்பாடலில் மிகவும்பிடித்த வரி "விழி காணும் காட்சி யாவும் உந்தன் வண்ணகோலம்தான்" அவர் மனைவிக்கும் அது பிடித்த வரியாக இருக்கக் கூடும் என்பது, அவர்களிடம் விடைபெற்று பேருந்தில் ஏறிய பின், அவர் கள் ஒருவர் கையை மற்றொருவர் பிடித்தபடி தொலைவில் நடப்பதை பார்க்கையில் தோன்றியது."ஆலம் விழுதுகள் போலே ஆடும் நினைவுகள் கோடி"... அந்த விழுதுகளின் அர்த்தத்தைத் தானே நாம் நிகழ்காலத்தில் தேடி, எதிர் காலத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறோம்? ●

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்திய அரசின் உதவிகள் காத்திரமானது

## மாநகர சபை உறுப்பினர் சுபியான்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்காக பல அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. இதன் மூலம் மக்கள் பல்வேறு நன்மைகளை பெற்றுள்ளனர் என யாழ். மாநகரசபை உறுப்பினர் பி.ஏ.எஸ். சுபியான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பாரதிய ஜனதாக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிசங்கர் பிரசாத் தலைமையில் வட கிழக்கு மக்களின் பிரச்சினை தொடர்பாக நேரடியாக ஆராய்வதற்கு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து சமயத்தலைவர்கள் புத்திஜீவிகள் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அண்மையில் யாழ். டெல்கா ஹோட்டலில் சந்தித்து உண்மை நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர்.

இந்த சந்திப்பின்போது கருத்து தெரிவித்த அஷ்ஹேய்க் பி.ஏ எஸ். சுபியான் இந்திய அரசாங்கத்திற்கு தங்கள் குழுவினர் எடுத்துச் சொல்வதற்காக இரண்டு முக்கிய விடயத்தினை இக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

ஆயிரம் வருட பாரம்பரியத்துடன் இங்குள்ள தமிழ் மக்களுடன் அந்நியோன்யமாக மிகவும் ஒற்றுமையுடன் ஐக்கியமாக வாழ்ந்து வந்தோம். ஆனால் 1990இல் புலிகள் எவ்வித முன்னறிவிப்புக்களுமின்றி வடபகுதியில் வாழ்ந்த முஸ்லிம் மக்களை இரண்டு மணித்தியாலம் அவகாசத்தில் இனச்சுத்திகரிப்பு செய்து வெளியேற்றி தமது பாசிசவாதக் கொள்கையை பறைசாற்றினர். இதனால் கடந்த இருபத்து மூன்று வருடங்களுக்கு மேலாக முஸ்லீம் மக்கள் வெளியே அகதி முகாம்களில் பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். தற்போது அவர்கள் சமாதான சூழலில் மீளத் திரும்புவதற்கு முனையும் போது வடக்கு மாகாணத்தில் இம் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் முற்றாக அழிந்து காடாகக் காணப்படுகின்றது. இந்திய அரசாங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்காக பல அபிவிருத்தித்திட்டங்களுக்காக பல்வேறு உதவிகளைச் செய்து வருவதையிட்டு எமது நன்றியை இந்திய அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்கின்றோம். அந்த உதவித் திட்டங்களில் முஸ்லிம் மக்களையும் உள்வாங்கி மேற்கொள்ள வேண்டும். என்ற கோரிக்கையை முஸ்லிம் மக்கள் சார்பில் முன்வைக்கின்றேன்.,

இதன் பின்பு 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பல அதிகாரங்கள் குறைக்கப்பட்டு வருவதாக தமிழ் பேசும் மக்களிடம் அபிப்பிராயம் நிலவி வருகின்றது. தற்போது மேலும் பல அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என பேரினவாத அரசியல் சிந்தனைப் போககுள்ள கட்சிகள் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். யுத்தம் முடிவடைந்த பின்னர். இந்நாட்டின் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ இந்தியாவிற்கு உத்தியோகப் பூர்வமான விஜயத்தை மேற்கொண்ட போது இந்திய ஜனாதிபதிக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் அளித்த உறுதி மொழியால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக பதின்மூன்றாவது திருத்தத்திற்கு மேலாக அதிகாரங்களை வழங்கி தீர்வுகாண்பேன் எனக் கூறியிருந்தார். எனவே இந்திய அரசாங்கம் அவ்வுறுதிமொழியை காப்பாற்றும்படி இலங்கை அரசாங்கத்திற்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும் இதுதான் தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலானோரின் அபிப்பிராயமாகும். என்றார்.

# கிளிநொச்சியில் உள்ள கிராமங்களின் சிறு வீதிகளின் திருத்தம் எப்போது?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப்பகுதியைஅண்டியுள்ள கிராமங்களின் சிறுவீதிகள் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளன. கணேசபுரம், திருநகர், ஜெயந் திநகர், கனகபுரம், ஆனந்த நகர், ஆனந்தபுரம், அம்பாள்குளம், உதயநகர், விவேகானந்த நகர், திருவையாறு, பரவிப்பாஞ்சான் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களின் சிறுவீதிகள் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளன.

இடப்பெயர்வுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மண் வீதிகளாகக் காணப்பட்ட இந்தக்கிராமங்களின் சிறு வீதிகள் நீரினால் அரிக்கப்பட்டு கடும் சேதமடைந்துள்ளன.

பிரதான வீதிகள்மற்றும் முக்கிய வீதிகள் தார் ஊற்றப்பட்டும், கொங்கிறீற் வீதிகளாகவும் தற்பொழுது புனரமைக்கப்பட்டுவருகின்றன.

இந்த வீதிகளுடாகச்சென்று பிரியும் குறுக்கு வீதிகள் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது. கூடிய சனச்செறிவுகளைக்கொண்ட இந்தக் கிராமங்களின் வீதிகள் அதிக பயன்பாடு உடையவை இதனால் இந்த வீதிகள் மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

சில குறுக்கு வீதிகள் பற்றைகளால் மூடப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் அவ்வீதியூடாக பயணம் செய்ய வேண்டியவர்கள் வேறு சுற்று வீதிகளைப்பயன் படுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி நகரத்துக்கு இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமளவான மக்கள் வருகை தருகின்றனர். நீண்டகாலமாக இந்தப்பகுதிக்கு வருகைதராமல் இருந்த காணிச் செந்தக்காரர்கள் வீட்டு உரிமையாளர்கள் மற்றும் இப்பகுதி மக்களின் உறவினர்களின் வருகை அதிகரித்துள்ளது. இதனால் பிரதான வீதிகள் உட்பட குறுக்கு வீதிகளிலும் நான்கு சக்கர வாகனப் போக்குவரத்து முச்சக்கர வண்டிப்போக்குவரத்து மோட்டார் சைக்கிள் போக்குவரத்து என்பன அதிகரித்துள்ளன.

வீதிகள் சீர் இன்மையால் மழைகாலங்களில் இவ்வாறான வாகனங்கள் இந்த வீதிகளில் பயணிக்க முடிவதில்லை எனவே வரும் மாரிகாலத்திற்குள்ளாவது இந்த வீதிகளைப்புனரமைக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்படும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (21)

## மகா கும்பாபிஷேகம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன பிரதிஸ்டா மகாகும்பாபிஷேக பெரும் சாந்தி விழா இன்று புதன்கிழமை காலை 9.21 மணியளவில் நடைபெறவுள்ளது.


கும்பாபிஷேக கிரியைகளை கிரியா கிரம ஜோதி சிவஸ்ரீ சுந்தா தியாகராஜா குருக்கள் ஆற்றவுள்ளார்.

அடியார்கள் - அபிஷேகத்துக்குரிய திரவியப் பொருட்களை ஆலயத்தில் வழங்கி வைரவப் பெருமானின் திருவருளை பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.





யாழ். ஒஸ்மானியாக்கல்லூரியில் அண்மையில் வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாணமட்ட மீலாத் விழா போட்டிகள் பிரதிக்கல்விப்பணிப்பாளர் ரி.இராசலிங்கம் ஆசிரிய ஆலோசகர் மீ.ராமகிருஷ்ணன் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுவதைக் காணலாம். (105)



# 2013 - 2014 குரு பெயர்ச்சி பலன்கள்



கும்பம்:

### அவிட்டம் 3,4-ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3-ஆம் பாதம்

மறப்போம், மன்னிப்போம் எனும் குணம் கொண்டவர் நீங்கள். குருபகவான் 28.5.13 முதல் 12.6.14 வரை உங்களின் பூர்வ புண்ய ஸ்தானமான 5 – ஆம் வீட்டில் அமர்வதால் வசதி வாய்ப்புகளையும், வாழ்க்கை தரத்தையும் ஒரு படி உயர்த்துவார். சந்தோஷம் பெருகும். குடும்பத்தில் வசந்தம் வீசும். குழந்தை இல்லாத தம்பதிக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். வீட்டில் தடைப்பட்டிருந்த சுபகாரியங்கள் கூடிவரும். தாயாருக்கு இருந்த நோய் குணமடையும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் பலிதமாகும். பூர்வீகச் சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். அரசாங்க அதிகாரிகளின் நட்பு கிடைக்கும்.

குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் உங்கள் ரசனை மாறும். சபைகளில் முதல் மரியாதை கிடைக்கும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். புது வீட்டில் குடிபுகுவீர்கள். குரு 5 – ஆம் பார்வையால் உங்களின் 9 – ஆம் வீட்டைப் பார்ப்பதால் தந்தையுடனான மனத்தாங்கல் நீங்கும். அவர் வழி உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சேமிக்கும் எண்ணம் வரும். வெளிநாடு சென்று வருவீர்கள். 11 – வது வீட்டை குரு பார்ப்பதால் மூத்த சகோதர – சகோதரிகள் ஆதரவாக இருப்பர். வழக்கு சாதகமாகும். நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும்.

**குருபகவானின் சஞ்சாரம்:** 28.5.13 முதல் 25.6.13 வரை உங்கள் திருதியாதி பதியும் – ஜீவனாதிபதியுமான செவ்வாயின் மிருகசீரிட நட்சத்திரத்தில் குரு செல்வதால், எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பண வரவு அதிகரிக்கும். இடம் வாங்க முயற்சிப்பீர்கள். வேலை அதிகரிக்கும். சட்டத்துக்குப் புறம்பாக எவருக்கும் உதவ வேண்டாம். 26.6.13 முதல் 28.8.13 வரை; 27.1.14 முதல் 12.4.14 வரை ராகுவின் திருவாதிரை நட்சத்திரத்தில் குரு செல்வதால், எதிர்காலம் குறித்த பயம், வந்துசெல்லும். வீட்டில் கூடுதல் அறை, தளம் கட்டும் முயற்சிகள் பலிதமாகும். கைமாற்றுக் கடனை அடைப்பீர்கள்.

29.8.13 முதல் 12.11.13 வரை உங்களின் தன – லாபாதிபதியான குரு, தனது நட்சத்திரமான புனர்பூசத்தில் செல்வதால், புதிய முயற்சிகள் வெற்றியடையும். அரசு காரியங்கள் நல்லவிதத்தில் முடியும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புது பொறுப்புகள் தேடி வரும். மகளுக்கு வேலை கிடைக்கும் திருமணமும் கூடி வரும்.

குரு 13.11.13 முதல் 26.1.14 வரை, புனர்பூசத்திலும் 27.1.14 முதல் 11.3.14 வரை திருவாதிரையிலும் வக்ரகதியில் செல்கிறார். இந்த கால கட்டத்தில் மனக் குழப்பம் அதிகரிக்கும். எனினும் வளர்ச்சி தடைப்படாது. உங்களைப் பற்றி விமர்சனங்கள் வரக்கூடும். காசோலை, முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். அரசு விஷயங்களிலும் கவனம் தேவை.

வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தேங்கிய சரக்குகளை தள்ளுபடி விலைக்கு விற்றுத் தீர்ப்பீர்கள். புது முதலீடுகள் செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். சொந்த இடத்துக்கு கடையை மாற்றுவீர்கள். கெமிக்கல், ஏற்றுமதி – இறக்குமதி, ஒப்பந்த வகைகளால் ஆதாயம் உண்டு. பங்குதாரர்கள் உங்களின் ஆலோசனைகளை ஏற்பர். உத்தியோகத்தில், உங்களை அலைக்கழித்த மேலதிகாரி வேறு இடத்துக்கு மாற்றப்படுவார். சில புதுமைகளைச் செய்து எல்லோரது கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சம்பள உயர்வு கிடைக்கும். புதிய வாய்ப்புகளும் தேடி வரும். வழக்கில் வெற்றி உண்டு. கன்னிப் பெண்களின் கனவு நனவாகும். அடி வயிற்றில் இருந்த வலி, தூக்கமின்மை விலகும். கல்யாணம் கூடி வரும். மாணவர்களுக்கு, நல்ல கல்வி நிறுவனத்தில் மேற்படிப்பை தொடரும் வாய்ப்பு கிட்டும். போட்டித் தேர்வுகளில் வெற்றி கிட்டும்.


கலைத் துறையினரே! வெகுநாட்களாக எதிர்பார்த்த நிறுவனத்திலிருந்து புது வாய்ப்பு கிடைக்கும். அரசியல்வாதிகள், எதிலும் வெற்றி பெறுவர்.

மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி செல்வம், செல்வாக்கு, திடீர் யோகங்களைப் பெற்றுத் தருவதாக அமையும்.

பரிகாரம்: மனவளம் குன்றியவர்க்கு உதவுங்கள். மகிழ்ச்சி தங்கும்.

(தொடரும்...)

# போட்டித்தன்மையை உருவாக்குவதன் மூலம் மாணவர்களின் திறமை வெளிக்காட்டப்படும்



(வேலணை)

மாணவர்களிடையே காணப்படுகின்ற திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களினை பாராட்டி ஊக்குவிப்பதனூடாக அவர்களிடையே கல்வியில் போட்டித்தன்மையினை உருவாக்குவதனூடாக அவர்கள் பாடவிதானச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் செயற்படுவார்கள் என ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன) தெரிவித்தார்.


நேற்று முன்தினம் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற 2012ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

கல்வி கற்கும் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர்ந்து அவர்களை எதிர்காலத்தில் நற்பிரஜைகள் ஆக்க வேண்டியவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள். மாணவர்கள் தமது பெற்றோருடன் இருப்பதை விட ஆசிரியர்களுடனேயே இருப்பது அதிகமாக காணப்படுகிறது எனவே அவர்களின் மனோபாவத்திற்கேற்ப அவர்களிற்கு கல்வி கற்பிப்பதுடன் நற்பழக்கவழக்கங்களையும் புகட்டி அவர்களை சாதனையாளர்களாக்க வேண்டும் எனத்தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திருமதி. சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் இராதகிருஸ்ணன், வேலணை பிரதேசசபை தலைவர் சி.சிவராசா ஆகியோர் கலந்து கொணடனர்.

## பரமர் சங்கமம்



'பாவியர் போகுமிடம் பள்ளமும் திட்டியுந்தான்' எண்டாலும் அந்தப் பள்ளந்திட்டி சிலருக்கு நல்ல வைரமான திட்டியாக அமைந்து விடுவதையும் காணலாம்.

அப்படியான ஒரு விடயத்தை தான் பரமர் பார்க்கப் போகிறார். இதுவும் புலிகளின் காலங்களில் நடந்து முடிந்த சாதி விடையம் அலசப்பட்ட கலை நிகழ்வாகவே இருக்கிறது.

அப்பொழுதெல்லாம் வடபகுதியில் பேர்போன ஶ்ரீதேவி வில்லிசைக் குழுவைக் கனபேர் மறந்து போயிருப்பினம். இருபது இருபத்தைந்து வயதுக்காரர்களுக்கும், அதுக்கு இளமையானவர்களுக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.

அந்த வில்லிசைக் குழுவை நடத்தி வந்த ஶ்ரீதேவி ஐயர் புலிகளின் அழுத்தங்களால் கனடாவுக்கு ஓடித்தப்பினவர் திரும்ப இப்பொழுது வந்து குடாநாட்டுப் பத்தரிகை ஒன்றில் வில்லிசைக் குழுபற்றி விளம்புரம் செய்வதைப் பார்க்க நேர்ந்தது.

அவர் நடத்தி வந்த வில்லிசையில் அழுக்கைப் போக்காட்டக் கூடிய சவுக்காரம் எது என்ற வினா எழுந்ததும் சன்லைற், மில்க்வைட், பார் சோப் இப்படி மாறி மாறி ஆமாப் போடுபவரும் வில்லு நாயகனுமான ஶ்ரீதேவி ஐயரும் சொல்லிக்கொண்டு வந்தனர்.

இந்தச் சவுக்காரங்கள் எல்லாம் இப்ப எங்கே ஓடி ஒளிந்து கொண்டன? எத்தனை பொருட்களையும், சங்கதிகளையும் நாங்கள் மறந்து போகும் அளவுக்கு காலம் கொண்டு சென்று விட்டது பாத்தீங்களா?

ஶ்ரீதேவி ஐயர் அழுக்குகளை அப்போது ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசாவுக்கு அனுப்பிவைத்தால் நல்ல வெள்ளை ஆக்கி அனுப்புவாரெண்டு சொன்னாரே பார்க்கலாம். ரசிகர்களின் கைதட்டல் வானைப்பிழந்தது.

அதுபோலவே ஐயரை புலிகள் பின்னிப் பிளக்கவும் காரணமாக அமைந்துவிட்டது. பொது எதிரியான அவரை அப்படிச் சொன்னால் பிழையில்லை என்று நினைத்தது பிழையாகவே போய்விட்டது.

ஜனாதிபதி பிரேமதாச சாதி அமைப்பில் சலவைத்தொழிலாளர் வம்சத்தைச் சேர்ந்தவர் எதிரியாயினும் சாதி அமைப்பைச் சுட்டிக் காட்டியது புலிகளுக்குப் பிடிக்கவில்லை.

அதற்குப் பின்பாக வடபகுதியில் இருந்து மறைந்த ஶ்ரீதேவி வில்லிசைக் குழு நிகழ்வுகளை நடத்துவதற்கு இப்போ விளம்பரங்கள் போட்டு வருகிறது.

அடிப்படையில் முதலாளித்துவ பூஸ்வாக்களான புலிகள் சாதி அமைப்பை தகர்ப்பதற்காக போலி வேடம் போட்டுக் கொண்டதாகவே கருதப்பட்டது. அத்தகைய தந்திரோபாயத்தால் சிறுபான்மை தமிழ் இளைஞர்களை வலையில் வீழ்த்துவதுதான் அவர்களின் நோக்கம்.

அதனால் அடிபாடுகளில் முன்னரங்க வீரர் அணிகளில் அவர்களை விட்டு பலி கொடுப்பதும் சிந்திக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் ஒருசில புத்தி ஜீவிகள், புலிகள் வென்று ஆட்சி அமைத்தால் பின்பாக தமிழர்களிடையே யுத்தம் ஒன்று வெடிக்குமென்னும் அபிப்பிராயம் கசிய வந்ததும் மறக்கக்கூடிய ஒன்றல்ல. எப்படியோ புலிகளால் விரட்டப்பட்ட பாவிகள் போன இடங்கள் பள்ளங்கள் அல்லாமல் திட்டியாக அமைந்ததால் இப்ப மீண்டும் ஒரு மிடுக்கோடு நாட்டுக்குத் திரும்பி உள்ளனரென்றால் பொய்யே என்ன நான் சொல்லுறே...

## ஆலயத்தில் திருட்டு

(கரணவாய்)

கரணவாய் நவண்டில் பகுதியில் அமைந்துள்ள கொலணாய் பிள்ளையார் ஆலயத்தில் பெறுமதி மிக்க பொருட்கள் களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கோயிலின் ஓடுகளை கழற்றி உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 5 பஞ்சால அடிதட்டு, 3 சரவிளக்குகள் உள்ளிட்ட பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் மறுநாள் காலை ஆலய பூசகர் ஆலயத்தை திறந்த போது பொருட்கள் திருடப்பட்டமை தெரியவந்ததையடுத்து உடனடியாக கோவில் நிர்வாகம் நெல்லியடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு 3 சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (18)

## திறன் விருத்தி செயலமர்வு

(வலிகாமம்)

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான திறன் விருத்திச் செயலமர்வு எதிர்வரும 14, 15ஆம் திகதிகளில விக்ரோறியாக் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சகல கணித ஆசிரியர்களும் தரம் 7, 8, 9 கைநூல்களையும் சிறந்த கற்பித்தல் உபகரணம் ஒன்றையும் நாளாந்த பாடசாலைக்குறிப்பையும் எடுத்து வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

# கடமையேற்பு

(வரணி)

வரணி வடக்கு தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கிளை இலE-8இல் இதுவரை இரவுக்காவலாளியாக பணி புரிந்த மு.இரத்தினம் மரணமடைந்த நிலையில் தற்போது புதிய காவலாளி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதில் அதே இடத்தைச்சேர்ந்த ஒருவரே தற்போது காவல் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

மரணமான முன்னாள் காவலாளிக்கு (இரவுக்காவலாளிக்கு) ஊதியமாக 3000 ரூபா வீதம் மாதாந்தம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (150)

## முரசின் இன்றைய பலன்


(12.06.2013 - புதன்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 29ஆம் திகதி. முழுநாளும் பூசம். சதுர்த்தி திதி பின்னிரவு 04.48 வரை. சித்தம் நாமயோகம். இராகுகாலம் 11.52 01.22 வரை. சுபநேரம் 04.22 - 05.52 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனைகட்ட நில மெடுக்க நன்நாள், விவாகப்பேச்சு ஆரம்பம், சகோதரி உதவும் பேறுகிட்டும், கண் சிகிச்சைக்காக பயணம் செய்தல், வங்கித் தொடர்பு பணக்ஷ்டத்தைப் போக்கும், பகை பூண்டிருந்தவர் நண்பாவர், புதியன கொள்வனவுண்டு. |
| ரிஷபம் | பிதா மற்றும் சகோதரர் உதவி கிட்டும், விட்டிருந்த பயணம் மீண்டும் ஆரம்பம், சத்திர சிகிச்சைக்கும், சீசா மூலம் குழந்தை பெற நந்நாள் குறிக்கப்படும், பத்திரிகை விளபர மூலம் மணப்பெண் கைகூடும், வெற்றுக் காசோலையில் கையெழுத்திட்டு மோசடி உருவாகும். |
| மிதுனம் | மனைவி சொல் மந்திர மாகிகாப்பாற்றும், வழக்கின் தீர்ப்பு சாதகமாகும், கோள்குண்டலத்தினால் திருமணப் பேச்சு ஸ்தம்பித்து விடும், தனித்திருப்பது ஆபத் தைத் தரும், அசாதாரண வேகம் விபத்தைதரலாம், சளி நோய வருத்தும், காலாவதியான பொருளைக் கட்டியழிப்பர். |
| கடகம் | பாலியல் துன்புறுத்தல் பற்றி விழிப்பு வேண்டும், சுவீப்பில் அதிர்ஷ்டமுண்டு, பரிசில்கள் கிட்டலாம், இடமாற்றக கடிதம் கைக்கு வரலாம், கையடக்கத் தொலைபேசி விபத்தை ஏற்படுத்தும், பிதாவின் செய்கை மானபங்கம் விளைவிக்கும், சகோதர வழியில் தலையிட்டு கைகலப்பும பிரிவும் எதிர்பார்க்கவும். |
| சிம்மம் | பிரிவுத்துயரம் வாட்டி வதைக்கும், முதலாளி தொழிலாளி உறவில் விரிசல் ஏற்படும், பொருள் கொள்வனவில் மோசடி ஏற்படலாம், ஆவணத்தின் நம்பகத் தன்மை ஆட்டம்கான வைக்கும், தாயகத்தை சிலர் விசா பிரச்சினையால் வந்தடைவார், நிறம் காரணமாக விவாகப் பேச்சு முறிவடையும், கள்ளநோட் கைக்கு வரலாம். |
| கன்னி | கனடாவிற்கு வெளிக்கிட்ட பயணம் கட்டு நாயக்காவுடன் நின்றுவிடலாம், களத்திர சுகக்கேடுண்டு, பிள்ளை ஒன்றின் செய்கையால் குடும்பமானம் கப்பலேறும், ஆவணங்கள் இன்மையால் சட்டப்பிடியில் சிக்குவர், விபத்தினால் இடப்பக்க உறுப்பொன்று பாதிக்கப்படும், பிணைக்கும் துணைக்கும் நிற்கவேண்டாம். |
| துலாம் | நீர்தத்துப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும், நஞ்சு செறிந்த உணவுப்பண்டங்கள் கேடு தரலாம், பசப்புவார்த்தையில் மயங்கி பணத்தை இழப்பீர், ஆவணங்கள் ஞாபக மறதியால் தொலைந்து போகலம், வங்கியில் பெறப்படும பணத்தை சரிபார்க்கவும் சமாந்தர சைக்கிள் சவாரி காவல துறைக்கு கொண்டு செல்லும். |
| விருச்சிகம் | பணமின்மையால் காசோலை திரும்பும், மாமன் உறவில் விரிசல் ஏற்படும், அனுமதிச்சீட்டில்லாப் பயணம் அபராதத்தைத்தரலாம், விஷ ஜெந்துக்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும், மின்சார ஒழுக்கு பாரிய நட்டத்தைக் கொண்டு வரலாம், ஜாதகத்தில் மோசடி செய்து திருமணம் நிறைவற்ற முயலும் அபாயம் உண்டு. |
| தனுசு | நாய்கள் குறுக்கே ஓடி விபத்தினை தோற்றுவிக்கலாம், பற்கள் தொடர்பான நோயினால் அவஸ்தைப்படலாம், திடீர் நட்பு கழுத்துக்குவரும் கத்தியாகும், சிகரட் புகைத்து தண்டம் விதிக்கப்படலாம், கருத்து முரண்பாட்டினால் நட்பு பறந்து விடும், கீரைக்கடைக்கு எதிர்க்கடை திடீரென முளைக்கலாம். |
| மகரம் | எதிர்பார்த்த நேர்முகத்தேர்வுகானல் நீராகிவிடும், சத்திர சிகிச்சை செய்ய வேண்டி நேரிடலாம், மனதுயரம் பணவரவால் குறைந்துவிடும், உதவாத வாக னத்தை பெற்றுத் தரமுயலலாம், பிரயாணத்தின் போது ஆவணங்கள் தொலைந்து போகலாம், சைக் கிள் பாரில் இருப்பதினால் விபத்து நேரிடலாம். |
| கும்பம் | மக்கள் மற்றும் மனைவியுடன் முரண்பாடு தோன்றும், போக்குவரத்து விதியை மதிக்காது தண்டனை ஏற்படும், நகை நட்டுக்கள் திருடர் வசம் அகப்படலாம், இதய நோய் வாட்டலாம், மாமன்மாரின் உறவு சுமுகமாக இருக்கும், வெளிநாட்டுத்திருமணம் காலை வாரிவடும், நண்பா குழாத்துடன் சேர்ந்து தவறு செய்து தண்டனை பெறலாம். |
| மீனம் | சத்திரசிகிச்சை மீண்டும் ஏற்படலாம், மனைக்குவரும் விற்பனையாளர்களால் தொல்லை உண்டாகும், காது நோய் வருத்தும், வங்கித்தொடர்பு அறும், பிள்ளைகள் பற்றிய பதகளிப்பு மனதைவாட்டும், பழைய பகைமை நட்பாக மாறும், அநாமதேய தொலைபேசி நபரால் பயம் ஏற்படும், கறவைப்பசு நோயினால் மரணிக்கலாம். |

4) இடைவெளி நிரப்புக.
ஒரே அளவுள்ள மூன்று மாம்பழங்களின் நிறை 2kg ஆகும். எனின் ஒரு மாம்பழத்தின் நிறை 650g மிலும் ....................................



5) 
(i) உருவில் நிறம் தீட்டப்படாத பகுதியை முழு உருவின் பின்னமாக தருக.
(ii) நிறந்தீட்டப்பட்ட பின்னத்திற்கான சமவலுப்பின்னத்தை குறிப்பிடுக.

6) ஒரு நோயாளிக்கு ஒரு தடவை 2 வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் எடுப்பதற்கு 30 மாத்திரைகள் வழங்கப்பட்டன. இம்மாத்திரைகள் அந்நோயாளிக்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானது? ....................


7) ஐந்து வாரமும், நான்கு நாட்களும் எத்தனை நாட்களாகும்? ....................

8) படுக்கை விரிப்பு ஒன்றின் விலை ரூபா 159.00 ரூபா ஆகும். அவ்விரிப்பானது 15 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது எனின் 6 படுக்கை விரிப்புகள் வாங்கிட தேவைப்படும் பணம் எவ்வளவு? ....................

9) 1l 500ml கனவளவுள்ள குளிர்பானம் ஆறு மாணவர்களிடையே சமமாக பங்கிடப்பட்டது. ஒரு மாணவன் பெற்றுக்கொண்ட குளிர்பாணத்தின் கனவளவு யாது? ....................

10) 
இடப்பக்கத்தில் உள்ள கடிகாரத்தின் முகத்தைப் பாருங்கள் அதில் காணப்படும் நேரத்தின் பின்னர் முதற்தடவையாக மணித்தியால முள்ளும். நிமிடமுள்ளும் செங்கோணமாக அமையும் நேரத்தை வலது பக்கத்தில் உள்ள கடிகார முகத்தில் வரைந்து காட்டுக.



11) பெருக்கல் '★' குறியீட்டினாலும் வகுத்தல் '✵' குறியீட்டினாலும் காட்டப்படும் எனின் 9★6✵3 இன் பெறுமானம் யாது? ....................

12) உருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?

....................

13) 10260 எனும் எண்ணைச் சொற்களில் எழுதிக்காட்டுக. ....................

14) 50 ரூபாவைக் கொடுத்து ரூபா 37.50 க்கு பெறுமதியான பொருள் ஒன்றை வாங்கியபின் எஞ்சும் பணம் எவ்வளவு?

**விடைகள்**

(1) 1) இறந்தகாலம்
2) ஊதி ஊதி
3) அங்கும் இங்கும் ஓடியாடி
4) பொன் + கதிர்
5) கடும்
6) வர்ணம்
7) மாணவர்கள்
(2) 1) வெள்ளிவிழா
2) சரணாகதி /தஞ்சமடைதல்
(3) 1) "அறஞ்செய்ய விரும்பு" என்பது ஔவையின் வாக்காகும்.
2) வீட்டுக்கு போகும் வழி எது?
(4) 1) பொன் செய்யும் மருந்து
2) ஆயிரம் பொன்
(5) 1) கொக்கரிக்கும்.
2) அலப்பும்
3) உறுமும்
(6) 1) நாம் பாடசாலைக்குச் செல்வோம்
2) இங்கே வா
(7) It is not good
2) Teacher
(8) 1) நான் பாடசாலைக்குச் செல்கிறேன்
(9) 1) இடப்பெயர்ச்சொல்
2) நீங்கள்
3) சினைப்பெயர்
4) நான்
(10) 1) 1
2) 3
3) 2
4) 4
5) 3
6) 4
7) 3
8) 1
9) 1
10) 3
11) 2
12) 3
13) 1
14) 2
15) 3
16) 1
17) 1
(11) 1) பதிரி வட்டம் வீசுதல் / தட்டெறிதல்
2) அம்பெறிதல் / ஈட்டிஎறிதல்
3) குண்டுபோடுதல்
4) தடைதாண்டி ஓட்டம்
(12) 1) 7
2) 20
3) 109
4) அதிகமாகும்
5) 1) 4/8 2) 2/4
6) 5 நாட்கள்
7) 39 நாட்கள்
8) 1044/=
9) 250ml
10) 
11) 18
12) 06
13) பத்தாயிரத்து இருநூற்று அறுபது
14) ரூபா 12.50



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு

பிரபல ஆசிரியர்களின் தொகுப்பு    1.30 மணி

**(1) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

அன்று கடும் வெயில். மாணவர்கள் சவர்க்கார நுரையினை பப்பாசிக்குழாயினால் ஊதி குமிழிகளை வரவழைத்து ஊதி ஊதி வினோதமடைந்தனர். சூரியனின் பொற்கதிர்கள் அக்குமிழிகளில் தெறிப்படையும் போது வானவில் நிறங்கள் இதோ என்று சத்தம் போட்டுக்கொண்டு அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடி மகிழ்ந்தனர்.

1. மகிழ்ந்தனர் எனும் சொல் குறிக்கும் காலம் எது? ....................
2. பந்தியில் இடம் பெற்றுள்ள அடுக்குத்தொடரை குறிப்பிடுக? ....................
3. பந்தியில் இடம் பெற்றுள்ள இணைமொழி ஒன்றைக்குறிப்பிடுக? ....................
4. பொற்கதிர் என்பதை பிரித்தெழுதுக. ....................
5. முதலாவது வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள பெயர் அடைமொழியை குறிப்பிடுக? ....................
6. நிறங்கள் எனும் சொல்லுக்கான ஒத்த சொல்லை குறிப்பிடுக? ....................
7. உயர்திணை, படர்க்கை, பன்மை பெயர்ச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக? ....................

**(2) பின்வரும் தொடருக்கான தனிச்சொல்லை எழுதுக.**

1. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா ....................
2. வேறு துணையில்லை என ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல் ....................

**(3) பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

1. அறஞ் செய்ய விரும்பு என்பது ஔவையின் வாக்காகும்
2. வீட்டுக்குப் போகும் வழி எது

**(4) பழமொழிகளின் மீதிப்பகுதியை எழுதுக.**

1. போதும் என்ற மனமே ....................
2. யானை செத்தாலும் ....................

**(5) இடைவெளி நிரப்புக.**

1. குயில் கூவும் என்பது போல கோழி ....................
2. மயில் அகவும் என்பது போல குரங்கு ....................
3. கரடி உறுமும் என்பது போல பன்றி ....................

**(6) கருத்தினை தமிழில் தருக.**

1. Lets go to school .................................... 2. Come here ....................................

(04 புள்ளிகள்)

**(7) கருத்தினை ஆங்கிலத்தில் தருக.**

1. இது நல்லதல்ல .................................... 2. ஆசிரியர் ....................................

(04 புள்ளிகள்)

**(8) சிங்கள தொடருக்கான கருத்தினை தமிழில் தருக.**

1. மம பாசலட்ட யனவா ....................................

(02 புள்ளிகள்)

**(9) வினாக்களுக்கு விடை தருக.**

1. வயல் என்பது எவ்வகை பெயர்ச் சொல்லாகும்? ....................................
2. முன்னிலை, பன்மை, பெயர்ச்சொல் ஒன்றை தருக? ....................................
3. கை என்பது எவ்வகைப் பெயர்ச் சொல்லாகும்? ....................................
4. தன்மை, ஒருமை பெயர்ச்சொல் ஒன்றை தருக? ....................................

(08 புள்ளிகள்)




**(10) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. உணவை கடித்து விழுங்கும் விலங்கு அல்லாதது.
   1. பாம்பு 2. நாய் 3. பூனை 4. எலி
2. பின்வருவனவற்றுள் பாய்ந்து பாய்ந்து செல்லக்கூடிய பறவை எது?
   1. மைனா 2. காகம் 3. புளுணி 4. புறா
3. அண்மையில் வெளியிடப்பட்ட தாள்காசுகளில் 'மன்னம்பிட்டிய பாலம்' அச்சிடப்பட்டுள்ள காசுத்தாள் எது?
   1. ரூபாய் நூறு 2. ரூபாய் ஐம்பது 3. ரூபாய் இருபது 4. ரூபாய் ஐந்நூறு
4. தேனிலிட்டு வைத்தல் மூலம் நீண்டகாலம் பேணக்கூடியது எது?
   1. மீன் 2. மிளகு 3. பலாவித்து 4. இறைச்சி
5. சூரிய நமஸ்காரத்தின் முதலாம் படி
   1. முழங்காலை மடித்து இருத்தல் 2. உடலை வளைத்து சமாந்தர நிலையில் இருத்தல்
   3. இரு கைகளையும் கூப்பி நிற்றல். 4. வலது காலை மடித்து இடது காலை நீட்டி இருத்தல்
6. வைரமான மரங்களை வாகனங்களில் ஏற்றிச் செல்லும் போது அதற்கான அனுமதிப்பத்திரம் பெற செல்ல வேண்டிய இடம்.
   1. பொலிஸ் நிலையம். 2. காணிப்பதிவு திணைக்களம்.
   3. தபால் நிலையம். 4. பிரதேச செயலாளர் காரியாலயம்.
7. இலங்கை வரலாற்றில் 'ஜயகங்கை' என அழைக்கப்படும் விசாலமான கால்வாய் எது?
   1. மினிப்பே கால்வாய் 2. எலஹரகால்வாய் 3. யோதகால்வாய் 4. மின்னேரி
8. தோலுடன் சேர்த்து அவித்த பின்னர் தோல் உறிக்கப்படும் கிழங்கு எது?
   1. வற்றாலை 2. மரவள்ளி 3. இராசவள்ளி 4. சேம்பிலை கிழங்கு
9. சூரிய வெப்பத்தில் மிக விரைவாக சூடாகக் கூடிய பொருள் எது?
   1. தகரப்பேணி 2. மணல்மண் 3. கருங்கல்துண்டு 4. பலகைத்துண்டு



10. 
    இவ்விளையாட்டானது சித்திரைப் புத்தாண்டுக்குரியதாகும்.
    1. வழுக்கல் மரம் ஏறுதல் 2. போர்த்தேங்காய்
    3. தலையணை ச் சண்டை 4. கொக்கான்விளையாட்டு
11. சந்திரன் வளர்வதும் இல்லை தேய்வதும் இல்லை எனினும் அவ்வாறு எமது கண்ணுக்கு தென்படக்காரணம்.
    1. பூமி சூரியனை சுற்றி வலம் வருவதனால். 2. சந்திரன் பூமியை சுற்றி வலம் வருவதனால்.
    3. சந்திரன் சூரியனை சுற்றி வலம் வருவதனால். 4. பூமி சந்திரனை சுற்றி வலம் வருவதனால்.
12. இலங்கையின் தேசியக்கொடியில் பச்சை நிறக்கீலம் உணர்த்திக்காட்டுவது.
    1. இலங்கை வாழ் பௌத்தர்களை 2. இலங்கை வாழ் தமிழர்களை
    3. இலங்கை வாழ் முஸ்லிங்களை 4. இலங்கை வாழ் பறங்கியரை
13. தேசியக்கொடியில் காணப்படும் வாளேந்திய சிங்கம்பின்வரும் எந்தநிறப்பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது?
    1. சிவப்பு 2. செம்மஞ்சள் 3. மஞ்சள் 4. பச்சை
14. ஆகாயத்தாமரை வளரும் விதம்.
    1. நீரினுள் அமிழ்ந்து வளரும் 2. நீரில் மிதந்த வண்ணம் வளரும்
    3. நிலத்தில் வேரூன்றி நீரில் மிதந்து வளரும் 4. நிலத்தில் வேரூன்றி வளரும்
15. செங்கண்மாரி நோய்க்குரிய பிரதான காரணம்.
    1. கொதித்தாறிய நீரை அருந்துதல். 2. அசுத்தமான உணவை உற்கொள்ளல்
    3. அசுத்தமான நீரை பருகுதல் 4. அசுத்தமான காற்றை சுவாசித்தல்
16. வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள இரு மாவட்டங்களும் எவை?
    1. பொலன்நறுவை - அநுராதபுரம் 2. கொழும்பு - காலி
    3. பதுளை - மொனராகலை 4. அம்பாறை - அநுராதபுரம்
17. பின்வருவனவற்றுள் கல்சியம் நிறைந்த உணவுப் பொருள்.
    1. நெத்தோலி 2. பயறு 3. ஒடியல் 4. பேரீச்சம்பழம்

**(11) பின்வரும் விளையாட்டுக்களின் பெயர்களை குறிப்பிடுக.**

1)  2)  3)  4) 

.................... .................... .................... ....................

**(12) கணித வினாக்களுக்கு விடை தருக.**

**இடைவெளி நிரப்புக.**

| | நிறை | 500g கொண்ட பைக்கற்றுக்களின் எண்ணிக்கை | 250g கொண்ட பைக்கற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1) | 3kg 500g | .................... | 14 |
| 2) | 5kg | 10 | .................... |

3) 545 அப்பியாசக்கொப்பிகளை 5 சிறுவர்இல்லங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது எனின், ஒரு சிறுவர்இல்லம் பெறும் அப்பியாசக்கொப்பிகளின் எண்ணிக்கை யாது? ....................

# நிலக்கரி ஊழல் புகார் விவகாரம்;

# 19 இடங்களில் சி.பி.ஐ.சோதனை



(புதுடில்லி)

மத்திய அரசு கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை நிலக்கரி சுரங்கங்களை ஏலம் விடாமல் ஒதுக்கீடு முறையில் தனியார் நிறுவனங்களுக்கு கொடுத்தது.

இந்த காலக்கட்டத்தில் 151 தனியார் நிறுவனங்கள் 68 நிலக்கரி சுரங்கங்களை பெற்றன. அதாவது 1700 கோடி டன் நிலக்கரி சுரங்கங்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 42 இலட்சம் கோடியாகும்.

நிலக்கரி சுரங்கங்களை ஏலம் விட்டிருந்தால் மத்திய அரசுக்கு பல இலட்சம் கோடி ரூபாய் வருவாய் கிடைத்திருக்கும். ஒதுக்கீடு செய்யப்பட்டதால் அரசுக்கு ரூ. 1.86 இலட்சம் கோடி இழப்பு ஏற்பட்டிருப்பதாக மத்திய கணக்கு தணிக்கை துறை கூறியது.

ஆனால் 10.67 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியானது. இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது. இதுவரை சி.பி.ஐ. இதில் 11 வழக்குகளை பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சி.பி.ஐ. அதிகாரிகள் டில்லி, கொல்கத்தா, ஐதராபாத்தில் 19 இடங்களில் அதிரடி சோதனை மேற்கொண்டனர். டில்லியில் உள்ள நவீன் ஜிண்டாலின் ஜிண்டால் பவர் அண்ட் ஸ்டீல் லிமிடெட் நிறுவனத்தில் நீண்ட நேரம் சோதனை நடந்தது.

நவீன் ஜிண்டாலின் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் கிடைத்தன. ஜிண்டாலின் சுரங்கங்களிலும் சோதனை நடத்தப்பட்டது.


இந்தியச் செய்திகள்

நிலக்கரி சுரங்கங்களை முறைகேடாக ஒதுக்கீடு பெற்ற காங்கிரஸ் தலைவர்களில் அதிக பலன் அடைந்தது நவீன் ஜிண்டால்தான். இவர் பல்வேறு பெயர்களில் 11 நிலக்கரி சுரங்கங்களை பெற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சொத்து மதிப்பை தவறாக காட்டியும், முந்தைய சுரங்க ஒதுக்கீடுகளை மறைத்தும் அவர் மோசடியில் ஈடுபட்டு இருப்பது தெரிய வந்துள்ளது. அதுபோல தாசரி நாராயணராவ் சுரங்க ஒதுக்கீடு விஷயத்தில் தாராளமாக நடந்து கொண்டிருப்பதை சி.பி.ஐ. அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அவர்கள் மீது புது வழக்குகள் பாய்ந்து இருப்பதால், அவர்கள் மீதான பிடி இறுகியுள்ளது. அவர்கள் இருவரையும் அழைத்து அடுத்தக்கட்ட விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளது.

நவீன் ஜிண்டால் மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்ததைத் தொடர்ந்து பங்குச் சந்தையில் அவரது நிறுவனத்தின் பங்குகள் மதிப்பில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டது.



அரசு முறைப் பயணமாக, இந்தியா வந்துள்ள, அவுஸ்ரேலிய கடற்படை தளபதி, வைஸ் அட்மிரல், ரேகிப்சுக்கு, டில்லியில் கடற்படை வீரர்களின், அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

# 40 கி.மீ. தூரம் மழையில் தோளில்சுமந்து

# கர்ப்பிணி மனைவியை காப்பாற்றிய கணவன்

## குழந்தையை காப்பாற்ற முடியவில்லை



பிரசவ வலியால் துடித்த, தன் மனைவியை பழங்குடி இளைஞன் காப்பாற்றுவதற்காக, பலத்த மழையில், 40 கி.மீ.தூரம், மனைவியை தோளில் சுமந்து வந்த சம்பவம், பரிதாபத்தையும், ஆச்சர்யத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும், அந்த இளைஞரால், மனைவியை மட்டுமே காப்பற்ற முடிந்தது. வயிற்றிலிருந்த, குழந்தையை காப்பற்ற முடியவில்லை.


கேரள மாநிலம், பத்தனம் திட்டா மாவட்டத்தில், கொன்னி என்ற அடர்ந்த வனப் பகுதி உள்ளது. இங்கு, பழங்குடியின மக்கள், கணிசமாக வசிக்கின்றனர். வனப் பகுதியில் உள்ள தேனை எடுத்து, அதை, நகர்ப் பகுதிகளில் விற்பது தான், இவர்களது பிரதான தொழில். இதில், மிக குறைந்த வருவாயே கிடைக்கிறது. இதனால், வறுமையின் பிடியில், இவர்கள் சிக்கியுள்ளனர். இந்த பகுதியைச் சேர்ந்த, அய்யப்பன் என்ற இளைஞருக்கு, அதே பகுதியைச் சேர்ந்த, சுதா என்ற பெண்ணுடன், கடந்தாண்டு திருமணம் நடந்தது. சுதா, ஏழு மாத கர்ப்பமாக இருந்தார். இந்நிலையில், கடந்த வாரம், சுதாவுக்கு, திடீரென பிரசவ வலி ஏற்பட்டது. அப்போது, அங்கு, மிக பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. அந்த பகுதிக்கு, கேரள மாநிலத்தின் மற்ற பகுதிகளிலிருந்து, எந்த வாகன போக்குவரத்தும் இல்லை. கால்நடையாகவே, நகரங்களுக்கு செல்ல வேண்டும்.

வேறு வழியில்லாததால், மனைவியையும், அவரது வயிற்றில் உள்ள சிசுவையும் காப்பாற்றுவதற்காக, அய்யப்பன், தைரியமாக ஒரு முடிவை எடுத்தார். மனைவியை தோளில் சுமந்தபடியே, பலத்த மழையையும் பொருட்படுத்தாது, அடர்ந்த வனப் பகுதியில், வேகமாக நடந்தார். அதிகாலை, 6 மணிக்கு, அவரது, நடை பயணம் ஆரம்பமானது. நேரம் செல்லச் செல்ல, மழை அதிகரித்தது. நீண்ட நேரம் சுமந்ததால், தோளில், கடுமையான வலியும் ஏற்பட்டது. ஆனால், மனைவியின் அபய குரலும், சிசுவை காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்பும், அவருக்கு உத்வேகத்தை ஏற்படுத்தின.

இதனால், சிரமத்தை பொருட்படுத்தாமல், தொடர்ந்து நடந்தார். இறுதியாக, 40 கி.மீ. தூரத்தை கடந்த அவர், மாலை, 6 மணிக்கு, மலை அடிவாரத்துக்கு வந்தார். அங்கிருந்த வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி தன் மனைவியை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். சுதாவை பரிசோதித்த மருத்துவர்கள், அவரது உடல்நிலை மோசமாக இருப்பதாக கூறினர். இதையடுத்து, உடனடியாக, கோட்டயம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு, தன் மனைவியை அழைத்து வந்தார். அங்கு, சுதாவை பரிசோதித்த மருத்துவர்கள், அவருக்கு இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளதாகவும், வலிப்பு நோய் ஏற்பட்டிருப்பதாகவும் கூறினர்.சுதாவுக்கு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. கடும் போராட்டத் துக்கு பின், சுதாவை காப்பாற்றினர். ஆனாலும், அவரது வயிற்றில் இருந்த குழந்தையை காப் பாற்ற முடியவில்லை. அந்த குழந்தை இறந்தே பிறந்தது. இதனால் அய்யப்பன் சோகத்தில் ஆழ்ந்தார். இந்த தகவல் வெளியானதும், கோட்டயம், பத்தனம்திட்டா பகுதியைச் சேர்ந்தவர்கள், மனைவியை தோளில் சுமந்தபடி, கடும் மழையில், 40 கி.மீ. நடந்த, அய்யப்பனின் மன உறுதியை பாராட்டினர். அவரது குடும்பத்துக்கு நிதி உதவியும், குவியத் தொடங்கியுள்ளது.

# 36 மணிநேரம் நின்று

# திருப்பதியை தரிசித்த பக்தர்கள்



கோடை விடுமுறையை யொட்டி திருப்பதியில் பக்தர்கள் கூட்டம் அதிக அளவில் இருந்தது.


36 மணி நேரம வரிசையில் காத்து நின்று ஏழுமலையானை பக்தர்கள் தரிசனம் செய்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 96,116 பக்தர்கள் ஏழுமலையானை தரிசனம் செய்தனர்.

ஒரே நாள் உண்டியல் வருமானமாக ரூ.2.57 கோடி திரட்டப்பட்டது. திருப்பதியில் கூட்டம் தற்போது குறைவடைய ஸ்ரீ காளகஸ்தி கோவிலில் வரலாறு காணாத வகையில் பக்தர்கள் கூட்டம் காணப்பட்டது. திங்கட்கிழமை சிவனுக்கு விசேஷ நாள் என்பதால் அதிகாலை முதலே ஏராளமான பக்தர்கள் ருத்ர அபிஷேகம் சேவையில் பங்கேற்றனர். அதே போல் ராகு-கேது பூஜையில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ஒரே நாளில் மட்டும் 35 ஆயிரம் பக்தர்கள் வாயுலிங்கேஸ் வரையும், ஞான பிரசன்னாம்பிகையையும் வழிபட்டனர். இது ஒரு சாதனை நிகழ்வு என்று கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.










## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்


..........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஜேர்மனியில் வெள்ளப்பெருக்கு

# 23 ஆயிரம் பேர் வெளியேற்றம்



ஜேர்மனியில் எல்பே நதியின் வெள்ளப் பெருக்கால் அணை உடைந்ததைத் தொடர்ந்து, அருகில் வசித்து வந்த சுமார் 23 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.


ஜேர்மனி நாட்டின் சேக்சனி அன்ஹால்ட் மாகாணத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கன மழை காரணமாக எல்பே நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அங்கு அபாயக் கட்டத்தைத் தாண்டி வெள்ளம் ஓடுவதால் அந்த மாகாணத்தின் தலைநகர் மக்டேபர்கில் நிலைமை மோசமடைந்துள்ளது. மாகாணத்தின் மற்ற பகுதிகளும் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளன.

இந்நிலையில், எல்பே நதி தனது துணை நதியான சாலேயுடன் சந்திக்கும் இடத்தில் உள்ள ஓர் அணை ஞாயிற்றுக்கிழமை திடீரென்று உடைந்தது. இதனால் அணையில் இருந்த நீர் வெளியேறி அருகில் உள்ள கிராமங்களும், அகேன் என்ற நகரமும் வெள்ளக்காடாகி விட்டன. இராணுவ ஹெலிகொப்டர்களையும், படகுகளையும் பயன்படுத்தி அங்கிருந்த மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு மீட்புப்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதனிடையே, மக்டேபர்க் நகரைச் சுற்றியுள்ள தாழ்வான பகுதிகளில் வசிக்கும் சுமார் 23 ஆயிரம் பேர் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். இந்த நகரைச் சுற்றிலும் தாற்காலிக வெள்ளத் தடுப்புகளை அமைக்கும் பணியில் நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்களும், மீட்புப்படை ஊழியர்களும் ஈடுபட்டுள்ளனர்.

உலகச் செய்திகள்

# கட்டார் நாட்டிலே பணக்காரரர்கள் அதிகம்



## – ஆய்வில் தகவல்

(டுபாய்)


உலகிலேயே கட்டார் நாட்டில்தான் கோடீஸ்வரர்கள் அதிகமாக உள்ளனர் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. 1,000 பேரில் 143 பேரிடம் ரூ.5 கோடிக்கு மேல் சொத்து இருப்பதாக தெரிய வந்துள்ளது. போஸ்டன் கன்சல்டிங் குழுமம் (பிசிஜி) 13ஆவது உலக கோடீஸ்வரர்கள் நிலவரம் பற்றிய ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: உலகத்திலேயே கட்டார் நாட்டில்தான் கோடீஸ்வரர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. கச்சா எண்ணெய் வளம் மிகுந்த இந்த நாட்டில் 1,000 பேரில் 143 பேரிடம் ரூ.5.60 கோடிக்கு தனிப்பட்ட சொத்துக்கள் இருக்கின்றன. இந்த வரிசையில் குவைத் நாடு 3ஆவது இடத்தை பிடித்துள்ளது. இந்த நாட்டு மக்களில், 11.5 சதவீதம் கோடீஸ்வரர்களாக உள்ளனர். பஹ்ரைன் (4.9 சதவீதம்) மற்றும் ஐக்கிய அரசு குடியரசு (4 சதவீதம்) முறையே 7ஆவது மற்றும் 9ஆவது இடங்களைப் பிடித துள்ளன. மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆரிக்காவில் கடந்த ஆண்டில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை இரட்டை இலக்கை எண்ணை நெருங்கும் வகையில் 9.1 சதவீதமாக இருந்தது. இவ்வாறு ஆய்வில் தெரியவந்துள்ளது.

# அமெரிக்க வான்தாக்குதல் நாவஸ் ஷெரீப் கண்டனம்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவின் வான் தாக்குதலுக்கு பாக். பிரதமர் கண்டனம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியது, பாகிஸ்தானின் வடக்கு வெஜிரிஸ்தான் பகுதியில் பயங்கரவாதிகளுக்கு எதிராக போர் என்ற பெயரில் வான் தாக்குதல் நடத்துவது சரியல்ல. இது தேசத்தின் இறையாண்மைக்கு எதிரானது. அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி..ஐ.ஏ.யின் தூண்டுதலில் தான் அமெரிக்கப்படைகள் வான் தாக்குதலை நடத்துகின்றன. இனிமேலும் இதனை அனுமதிக்கமாட்டோம் என்றார். இதனிடையே பாகிஸதானின் தக்ரீக்-இ-இன்சாப் கட்சி ,அமெரிக்க வான்தாக்குதலுக்கு எதிராக கண்டனத் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

# தரையிறங்கிய விமானம் நொறுங்கியது



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில், 52 பேருடன் சென்ற விமானம் தரையிறங்கும் போது நொறுங்கியதில், இரண்டு பயணிகள் காயமடைந்தனர். இந்தோனேசியாவில் அடிக்கடி விமான விபத்துக்கள் நடக்கின்றன. கடந்த ஏப்ரல் மாதம், ஒரு விமானம் ஓடுபாதையில் இருந்து விலகி மோதி நின்றதில் பலர் காயமடைந்தனர்.

இதற்கிடையே, சீனாவில் தயாரிக்கப்பட்ட, இந்தோனேசியாவின், "மெர்பாட்டி நுசந்தாரா" விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானம், ப்ளோர்ஸ் தீவிலிருந்து புறப்பட்டு, டெங்காரா மாகாணத்தில் உள்ள குபாங் நகரில் நேற்று, தரையிறங்கியது. இந்த விமானத்தில், 46 பயணிகளும், 6 விமான ஊழியர்களும் இருந்தனர். தரையிறங்கிய விமானம் திடீரென நொறுங்கி, உடல் பாகம் தரைதட்டியது. இதனால், விமான இறக்கைகள் சேதமடைந்தன. விமானம் நொறுங்கியதில் கண்ணாடிகள் உடைந்ததில் இரு பயணிகள் காயமடைந்தனர். மற்றவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

# அரசருக்கு எதிராக கருத்து குவைத் பெண்ணுக்கு சிறை

(ரியாத்)

ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான குவைத்தில் மன்னர் ஆட்சி நடக்கிறது. அங்கு ஷேக் ஷபா அல்-அகமது அல்-சபா மன்னராக உள்ளார். அங்கு மன்னரை அவமதித்து கருத்துகள் தெரிவித்தால் அது பெரிய குற்றமாக கருதப்படுகிறது.

இந்த நிலையில், அல்-அஜ்மி என்ற பெண், மன்னருக்கு எதிராக டுவிட்டர் இணையத் தளத்தில் தனது கருத்தை வெளியிட்டிருந்தார்.

அதில், மன்னர் ஆட்சியை தூக்கி எறிய மக்கள் முன்வர வேண்டும். அதற்கு அனைவரும் ஒன்று திரள வேண்டும் எனக் கூறியிருந்தார். மேலும், இக்கருத்தை தனது கைத்தொலைபேசி மூலமும் பரப்பி வந்ததாக தெரிகிறது.

எனவே, அஜ்மி கைது செய்யப்பட்டார். அவர் மீது நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் இவருக்கு 11 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது.



அதை தொடர்ந்து அவர் உடனடியாக சிறையில் அடைக்கப்பட்டார். குவைதததில் இது போன்ற குற்றத்துக்காக நீண்ட நாட்கள் சிறை அடைக்கப்பட்ட முதல் பெண் இவர்தான்.

இதற்கிடையே, இந்த தீர்ப்பு சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குவைத்தில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்பு 2 பெண்களுக்கு நீதிமன்றம் சாதாரண தண்டனை விதித்தது. பின்னர் அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

# இரு சிறுமிகளைக் காப்பாற்றிய நாய்க்கு ஹீரோ வரவேற்பு



(மணிலா)

பிலிப்பைன்சில் இரு சிறுமிகளை காப்பாற்றும் முயற்சியில் தனது பாதி முகத்தையே இழந்து அமெரிக்காவில் சிகிச்சை பெற்று திரும்பிய நாய்க்கு சிறப்பான வரவேற்பு அழிக்கப்பட்டது. பிலிப்பைன்சில் ஜம்போங்கா பகுதியைச் சேர்ந்த ரூடி பன்கால் என்பவர் கலப்பின நாயை செல்லமாக வளர்த்து வந்தார். கபாங் என்று பெயரிடப்பட்ட அந்த நாய் தனது எஜமானரின் மகள் மற்றும் உறவுப் பெண் ஆகியோருடன் கடந்த 2011 டிசம்பர் மாதத்தில் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தது. அப்போது, வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவர்கள் மீது மோதுவது போல வந்தது.

அப்போது அந்த நாய் மோட்டார் சைக்கிளின் குறுக்கே பாய்ந்து சிறுமிகள் மீது மோதுவதை தவிர்த்தது. இந்தச் சம்பவத்தில் அந்த நாயின் முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. வீரமாக செயற்பட்ட அந்த நாயை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற முயற்சியில் ஏராளமானோர் நன்கொடை கொடுக்க முன்வந்தனர். 45 நாடுகளிலிருந்து ரூ.16 இலட்சம் நன்கொடை கிடைத்தது. அதைக்கொண்டு அந்த நாய்க்கு அமெரிக்காவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. கலிபோர்னியா பல்கலைக்கழக டாக்டர்கள் சிகிச்சை அழித்தனர். நாயின் சேதமடைந்த மேல் வாய்ப் பகுதியை மறுசீரமைப்பு செய்ய முடியவில்லை. 8 மாத சிகிச்சையில் நாய் குணமடைந்து மீண்டும் தாய்நாடு திரும்பியது. மணிலா விமான நிலையத்தில் அந்த நாய்க்கு ஏராளமானோர் திரண்டு வரவேற்பு அளித்தனர்.



அமெரிக்காவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சம ஊதியத்தை வழங்குவதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை கொண்டாடும் வகையில் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றும் அதிபர் பராக் ஒபாமா.

# பொன்னாலை மக்களின் தேவைகள்; அதிகாரிகளைக் கூட்டி ஆராய்வு



பொன்னாலை மேற்குப் பகுதி மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளரும், வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தலைமையில் நடைபெற்றது.

பொன்னாலை மேற்கில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது பொன்னாலையில் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதி மக்களின் வீடு கட்டுமான பணிக்குத் தேவையான மண், கல் போன்ற பொருட்களை சிரமம் இன்றி இலகுவான முறையில் பெற்றுக்கொள்வது சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

இதுதொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக சிவகுருபாலகிருஷ்ணன் (ஜீவன்) தெரிவித்தார்.

இதில் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் செல்லக்குமார், பொன்னாலை கிராம சேவையாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வாழ்க்கைச் சுமை கழுத்தை நெரித்ததா?

## வர்த்தகரின் விபரீத முடிவு

(திருநெல்வேலி)

கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் கட்டடப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்தி வந்த வர்த்தகர் ஒருவர் நஞ்சு அருந்தியதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்குணமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த சில வருடங்களாக இப பகுதியில் வசித்துவந்த இவர், சில மாதங்களுக்கு முன்னர் கல்வியங்காடு, பருத்தித்துறை வீதியில் இக் கடையை வாடகைக்கு எடுத்து நடாத்தி வந்தார். அண்மையில், கடைக்கு அருகாமையில் மற்றொரு கடையையும் வாடகைக்குப் பெற்றிருந்தார். இவர் மூன்று பெண் பிள்ளைகளுக்குத் தந்தை எனத்தெரிவிக்கப்பட்டது.

பணப் பிரச்சினையே இவரது இம்முடிவுக்குக் காரணம் எனத் தெரியவருகின்றது. சில மாதங்களுக்கு முன்னர் ஒரு இலட்சத்துக்கு மேலான பணத்தைக் காலையில் கொண்டு வந்து கடையைத் திறந்து கடை மேசையில் வைத்துவிட்டு இவர் வெளியே துப்புரவு செய்து கொண்டிருந்தபோது அப் பணத்தை எவரோ களவாடிச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# பல்கலை மாணவன் மீது கிழக்கில் தாக்குதல்

மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைநெறி மாணவன் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக அழகியல் கற்கைநெறி 3 ஆம் வருட மாணவனான யோ.அமிர்தராஜ் என்பவர் மீதே இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தியதாகவும் காயங்களுக்குள்ளான மாணவன் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லடி பிரதேசத்திற்கு இரவு சென்ற இனந்தெரியாத சிலர் இவரை மிகமோசமாக தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த சக மாணவர்கள், தாக்குதலுக்கு இலக்கான மாணவன் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைநெறி மாணவர் ஒன்றியத் தேர்தலில் தலைமை வேட்பாளராக போட்டியிடுவதாகவும் இதனால் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

# ஆயுர்வேத வைத்தியசாலை நயினாதீவில் திறப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடைய வழிகாட்டலுக்கமைய சுதேச வைத்தியத்துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்கவின் அறிவுரைக்கமைய நாகதீப புரான றஜ குரு மகா விகாராபதி வடமாகாணத்தின் பிரதான சங்கராயக்க குரு பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க சாவாமி வகன்சையினுடைய வேண்டுகோளுக்கமைய கடற்படையின் பங்களிப்புடன் 3.5 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துச் சாலையும் போசாக்கு குடிலும் நேற்றுக்காலை 10.00 மணிக்கு வேலணைப் பிரதேச சபை தவிசாளரும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல) தலைமையில் நடைபெற்று, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தோவானந்தா, சுதேச வைத்தியதுறை அமைச்சர் சாலிந்த திசாநாயக்கவும் இணைந்து திறந்து வைத்தனர்.

நிகழ்வில் தலைமையுரையாற்றிய பிரதேச சபை தவிசாளர், வேலணை தற்பொழுது அபிவிருத்திப்பாதையில் செல்கிறது. தற்பொழுது எமது அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் மக்களிடமிருந்து பெற்ற தெரிவுகளுக்கமைய நயினாதீவு மண்ணில் மூன்று வேலைத்திட்டங்கள் செய்யப்படவுள்ளன எனத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கூறுகையில் எமக்கு எவ்வளவு பல முள்ளதோ அதை வைத்துத் தான் சில வேலைத்திட்டங்களை, அபிவிருத்திகளை செய்கின்றோம். எம்மை மக்களாகிய நீங்கள் இன்னும் பலப்படுத்தும் பொழுது மென்மேலும் அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாகக் கொண்டுசெல்லமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுதேச வைத்தியத்துறையின் செயலாளர், வடமாகாண கடற்படை கட்டளைத் தளபதி, சித்த ஆயுரவேத மருதுவத்துறை அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொது மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

---

### மாணவியைப்...

இலங்கைகை மனித உரிமை ஆணைக்குழு இந்தச் சம்பவத்தை விசாரிக் கவுள்ளது.

இன்று கிளிநொச்சியில் நடைபெறும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய நடமாடும் சேவையின் போது இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடாத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

---

### வடக்கில் உதவி...

மத்தியில்தான் வடமாகாணத்தில் 539 தொண்டராசிரியர்களுக்கு நியமனங்களை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதனடிப்படையில் யூலை மாதம் முதலாம் திகதி உதவி ஆசிரியர்களாக நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே இதனை ஒரு தொழில் வாய்ப்பாக மட்டும் எண்ணாமல் உங்கள் வாழ்வாதாரத்தையும், சமூகத்தையும் முன்னேற்றும் வகையில் நீங்கள் செயற்படவேண்டுமென்பதுடன் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியான முறையில் எமது மக்கள் பயன்படுத்துவார்களேயானால் நாம் மேலும் முன்னேற்றம்காண முடியும் என்றும் சுட்டிக்காட்டினார். இதன்போது ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்) உடனிருந்தார்.

---

### இலங்கை...

குறித்து இந்திய பிரதமர், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகியோருடன் கலந்துரையாட உடனடியாக இந்தியாவுக்கு வருமாறு, இந்திய அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்புக்கு அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அடுத்த சில தினங்களில் புதுடில்லி புறப்பட்டுச் செல்ல உள்ளனர். கூட்டமைப்பினர் இந்திய பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி, வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஜித், நிதியமைச்சர் பா.சிதம்பரம் ஆகியோரைச் சந்தித்து, இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தீர்மானகரமான பேச்சுவார்த்தைகளை நடத்த இவுள்ளதாக இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்திய, இலங்கை உடன்படிக்கையுடன் தொடர்புடைய அதிகாரங்களின் மார்ற்றங்களை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சி தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுக்களை நடத்துவதற்காகவே இலங்கைக்கான விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பது குறித்து புதுடில்லி கவனம் செலுத்திவருவதாகப் பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

### ரணில்...

ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் மீது நேற்று மாலை இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாலை 4.30 மணியளவில் பலபிட்டிய - மீகெட்டுவத்த பிரதேசத்தில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

மீன்பிடித் தொழிலுக்குச் சென்று சீரற்ற காலநிலையால் உயிரிழந்த சிலரது மரண வீடுகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட குழுவினர் சென்றுள்ளனர். இதன்போது நூற்றுக்கும் அதிகமான நபர்கள் தங்களை நோக்கி கல்வீச்சுத் தாக்குதல் நடாத்தியதாகவும் அதில் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

---

### மீனவர்களுக்கு...

மற்றும் நீரியல்வளத்துறை பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன மேலும் தெரிவித்தார்.

அண்மையில் நிலவிய கடும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலையால் இதுவரை 47 மீனவர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 14 பேர் காணாமல் போயுள்ளதாகவும் மீன்பிடி மற்றும் நீரியல்வள பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் உயிரிழப்பு சம்பவத்தில் ஒருவருக்கு ஒருவர் பந்தை பரிமாறாமல் இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தடுக்கும் வகையில் செயற்பட வேண்டியது அனைத்து அதிகாரிகளின் பொறுப்பு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த அனர்த்தம் குறித்து முன்னெச்சரிக்கை விடுக்காமை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் மீது பிரதி அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மீனவர்களை காப்பாற்ற ஊடகங்கள், பொலிஸார், கடற்படை, விமானப்படையினர் மேற்கொண்ட பிரயத்தனம் பாராட்டுக்குரியது. அனர்த்தம் குறித்து ஊடகங்களுக்கு முன்னரே தகவல் வழங்கியிருந்தால் பாரிய இழப்பை தவிர்த்திருக்கலாம். மீனவர்களை காப்புறுதி திட்டத்திற்குள் கட்டாயம் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். 750 ரூபா செலுத்தினால் 1 இலட்சம் ரூபாவும் 1500 ரூபா செலுத்தினால் 3 [illegible] ரூபாவும் மீனவர் மரணத்தின் போது காப்புறுதியாக தற்போது வழங்கப்படுகிறது. ஆனால் அண்மைய விபத்தில் உயிரிழந்த இரண்டு மீனவர்கள் மட்டுமே காப்புறுதி பெற்றுள்ளனர்.

அனைத்து மீன்பிடிப் படகுகளுக்கும் தரச் சான்றிதழ் வழங்கப்படும். அதனை பெறமறுக்கும் படகுகளுக்கு மீன்பிடிக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது. இது குறித்து சட்டம் கொண்டுவரப்படும். என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

# அரசியல் தெரியாத பௌத்த தேரர்கள் மாகாண சபையில் கைவைக்க முடியாது

## அனல் கக்குகிறார் ஆனந்தசங்கரி



மாகாணசபைத் தேர்தல் முறைமையானது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டது.

அரசியல் தெரியாத தேரர்களினால் மாத்திரமன்றி இதில் கைவைக்கும் உரிமை இந்தியா மற்றும் இலங்கைக்கு கூட கிடையாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

இந்த நாட்டில் சிறுபான்மையினர் இல்லை என்று அரசாங்கம் சொல்லி வருகின்றது. அவ்வாறு சிறுபான்மை இனத்தினர் இல்லை என்ற உணர்வை அரசாங்கமே தனது நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இந்த நாட்டில் இருபது வருடங்களாகவே ஜனநாயகம் இல்லை. காசு கொடுத்து அனைவரையும் அழைத்துவந்து மூன்றில் இரண்டைக் காட்டி ஆட்சி நடத்துப்படுகின்றது.

ஜனாதிபதியிடம் நான் துணிச்சலாக சில விடயங்களைக் கூறியுள்ளேன், நாட்டை உம்மிடம் தந்துள்ளதே தவிர உம் சீடர்களிடம் தரவில்லை. நாட்டை நீர் பாதுகாக்க வேண்டுமே தவிர உமது சீடர்கள் பாதுகாக்க கூடாது. நாட்டை உம் சீடர்கள் அழிக்கின்றார்கள் என்று தான் கூறியதாக அவர் சுட்டிக் காட்டினார்.

2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் முன்பு இனம் அழிந்து போகின்றது. ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பிடம் நான் கேட்ட போது யாரும் ஒத்துவரவில்லை. நான் பொய் பேசுவதில்லை, இலஞ்சம் பெற்றதுமில்லை. அதனால் அரசியலில் நிறைய வாய்ப்புக்களை இழந்துள்ளேன் என்றார்.

ஊடகத்தொழில் என்பது இன்று ஒரு பயங்கரமான தொழிலாக இந்த நாட்டில் மாறி விட்டது. இங்கு நடக்கும் அனைத்து விடயங்களையும் 10 நிமிடங்களில் உலகம் பூராகவும் வெளிப்படுத்தக்கூடிய நிலையில் இன்றைய விஞ்ஞான உலகம் வளாந்து நிக்கின்றது.

இந்த வகையில் ஊடகங்கள் உண்மையான விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறான பயங்கரமான தொழிலை மேற்கொள்பவர்கள் தாங்கள் எழுதுவதை நன்றாக யோசித்து எழுத வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

1959 ஆம் ஆண்டு தொடக்கம் நான் தேர்தலில் போட்டியிட்டு வருகின்றேன். 60 வருட கால அரசியல் அனுபவத்தினை நான் பெற்றிருக்கின்றேன். இந்த அரசியலில் நான் நிறைய அடி வாங்கயிருக்கின்றேன். என்னை அழிப்பதற்கு பலர் முயற்சித்தார்கள். ஆனால் அவர்களால் என்னை அழிக்க முடியவில்லை. என்னை எவராலும் அழிக்க முடியாது.

இந்த உலகத்தில் ஒரு மனிதனுக்கு எவ்வளவு நல்ல குணங்கள் இருக்கின்றதோ அதற்குட்பட்டவனாகவே நான் வாழ்ந்து வருகின்றேன் என்னை அழிப்பற்கு ஆண்டவன் ஒருவனால் தான் முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேர்மையாக இருந்த காரணத்தினால் பல வாய்ப்புக்களை நான் இழந்திருக்கின்றேன். கிளிநொச்சி இன்று ஒரு சிறந்த நகரமாக விளங்குவதற்கு நானும் ஒரு காரணம். நான் இல்லாவிட்டால் கிளிநொச்சி இந்தளவிற்கு வந்திருக்காது என்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். இருப்பினும், யுத்தம் முடிந்த பின்னர் இராணுவத்தின் தொகையை இரட்டிப்பாக்க வேண்டும் என்று தெரிவித்திருந்த முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரும்பியது. தேர்தல் முடிந்த பின்னர் எல்லோரும் ஒன்று சேரவேண்டும் என்று சம்மந்தன் அழைப்பு விடுத்திருந்தார் என்றார்.

இன்று கூட்டமைப்பு வெளிநாடுகளுக்கு அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு வருகின்றது. இந்த பயணங்களின் போது எனக்கு ஒரு அழைப்பையேனும் விடுப்பது கிடையாது. அல்லது வெளிநாட்டில் கதைப்பதற்கு ஏதாவது யோசனை வைத்திருக்கின்றீர்களா என்று கூட சம்மந்தன் கேட்பதும் கிடையாது. ஆனால் நாடாளுமன்றத்தில் பேசும் போதும் மட்டும் ஆனந்த சங்கரி இவ்வாறு ஊடகங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார் என்று தெரிவிப்பார் என அவர் சுட்டிக்காட்டினார்.

# சதம் அடித்து தவான் கை கொடுக்க இந்தியா 8 விக்கெட்டுக்களால் வெற்றி

மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான சாம்பியன்ஸ் டிராபி லீக் போட்டியில் இந்தியாவின் தவான் சதம் அடித்து கைகொடுக்க, இந்தியா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்தில் நேற்று நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் இந்தியா, மேற்கு இந்தியத்தீவு அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் கப்டன் டோனி களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. மேற்கிந்தியத்தீவுகள் அணியில் நீக்கம் செய்யப்பட்ட ராம்தினுக்குப்பதில் சமி சேர்க்கப்பட்டார்.

மேற்கிந்தியத்தீவு அணிக்கு கெய்ல், சார்லஸ் ஆரம்பம் கொடுத்தனர். உமேஷ் பந்துவீச்சில் கெய்ல் இரண்டு பவுண்டரி அடித்தார். இவர் புவனேஷ்வர் வேகத்தில் 21 ஓட்டங்களுக்கு வெளி யேறினார். உமேஷ் பந்துவீச்சில் சார்லஸ் மூன்று பவுண்டரி அடித்தார். தொடர்ந்து கோஹ்லி, அஷ்வின் ஓவரிலும் தலா ஒரு சிக்சர் அடித்தார். அரை சதம் கடந்த சார்லஸ் ஜடேஜா சுழலில் 60 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் டேரன் பிராவோ ஒன்றிரண்டு ஓட்டங்களைச் சேர்த்தார்.

இஷாந்த் இரண்டு பவுண்டரி, இரண்டு சிக்சர் அடித்து அரை சதத்தை எட்டினார். முடிவில், மேற்கு இந்திய தீவு அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 233 ஓட்டங்களை எடுத்து இந்திய அணிக்கு ஷிகர் தவான், ரோகித் சர்மா ஜோடி சிறப்பான ஆரம்பம் கொடுத்தது. ரோச் பந்துவீச்சில் தவான் இரண்டு பவுண்டரி அடித்தார்.

மறுமுனையில் இவரது ஓவரிலேயே ரோகித் இரண்டு பவுண்டரி அடித்து, அரைச் சதம் கடந்தார். இவர் 52 ரன்களில் அவுட்டானார். மறுமுனையில் தவானும் தன் பங்கிற்கு அரை சதம் விளாசினார். கோஹ்லி (22) ஓட்டங்களை எடுத்தார். நரைன், கெய்ல் ஓவரில் தினேஷ் கார்த்திக் தலா ஒரு பவுண்டரி அடித்தனர். பிராவோ பந்தில் சிக்சர் அடித்து தவான் சதம் கடந்தார். 2 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், தினேஷ் ஒரு பவுண்டரி அடித்து அசத்தினார்.

இந்திய அணி 39.1 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 236 ஓட்டங்கள் எடுத்து, 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தவான் (102) ஓட்டங்களையும், தினேஷ் (51) ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# பாதுகாப்பு பற்றி ஆலோசனை



(கொழும்பு)

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள மாலைதீவின் பாதுகாப்பு படை பிரதானி மேஜர் ஜெனரல் அஹமட் சியாமுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அலரிமாளிகையிலேயே இந்த சந்திப்பு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

5 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மாலைத்தீவு பாதுகாப்பு படை பிரதானி விமானப் படையின் தளபதி எயார் மார்ஷல் ஹர்ஷவிக்ரம, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

1986 ஆம் ஆண்டு மாலைதீவின் இராணுவத்தில் இணைந்துள்ள அஹமட் சியாம் அமெரிக்கா, இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் பாதுகாப்பு தொடர்பிலான பயிற்சிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பின்வாங்கினார் அத்வானி

பாரதிய ஜனதா கட்சியில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு கட்சியின் தேர்தல் குழு தலைவர் பதவி கொடுக்கப்பட்டதை எதிர்த்து தான் வகித்த அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் ராஜினாமா செய்வதாக கூறியிருந்த கட்சியின் நிறுவுனர்களில் ஒருவரான எல்.கே.அத்வானி, 24 மணி நேரத்துக்குள் தனது முடிவை திரும்பப் பெற்றுவிட்டார்.

கட்சியின் பல்வேறு தலைவர்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கோரிக்கையின்படி அவர் தனது முடிவை மாற்றிக் கொண்டதாக எல்.கே.அத்வானியின் வீட்டில் அவரின்றி நடைபெற்ற நிருபர்கள் சந்திப்பின் போது பாரதிய ஜனதா கட்சித் தலைவர் ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

அத்வானி கட்சி தொடர்பாக எழுப்பிய கரிசனைகள் கவனிக்கப்படும் என்று நான் கட்சியின் சார்பாக தெரிவித்தேன். இது குறித்து அவரோடு இணைந்து செயல்படுவோம் என்றும் கூறினேன். இன்று மதியம் ஆர்.எஸ்.எஸ்.அமைப்பின் தலைவரான மோகன் பகவத், அத்வானியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். தேசிய நலனை கருத்தில் கொண்டு அவர் தொடர்ந்து கட்சிக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் பாரதிய ஜனதாகட்சியின் நாடாளுமன்றக் குழுவின் முடிவை மதிக்க வேண்டும் என்றும் மோகன் பகவத் கேட்டுக் கொண்டார். மோகன் பகவத்தின் ஆலோசனையை ஏற்க அத்வானி முடிவு செய்துள்ளார். என்றார் ராஜ்நாத் சிங்.

# கடலுக்குள் பாய்ந்த முச்சக்கர வண்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரியை நோக்கி வந்த முச்சக்கர வண்டியொன்று வேகக்கட்டுப்பாட்டை மீறி கேரதீவுப் பாலத்திற்கு அருகாமையில் கடலுக்குள் பாய்ந்து சேதமடைந்தது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் இடம்பெறவில்லை.

# வருடாந்த பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாசையூர் அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்த பெருவிழா நாளை இடம்பெறவுள்ளது.

காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலியும், விழாத்திருப்பலி காலை 6.30 மணிக்கு இடம் பெறும்.


யாழ்.ஆயர் தோமஸ் சுந்தரநாயகம் அடிகள் தலைமையில் கூட்டுத்திருப்பலியும் இடம் பெற்று மாலை 4.30மணிக்கு திருச்செபமாலையுடன் புனிதலின் திருச்சுபே தேர் பவனி இடம்பெறும். (52)

# சுதேச வைத்தியர்களுக்கு பதக்கம்

(யாழ்ப்பாணம்)

சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க அவர்களின் அறிவுரைக்கு இணங்க மகிந்த சிந்தனை முன்னோக்கு தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக ஆயுர்வேத வைத்தியசபையினால் பதிவு செய்யப்பட்டு 25 வருடங்களைப் பூர்த்தியடைந்த ஆயுர்வேத வைத்தியர்களைப் பாராட்டும் முகமாக சான்றிதழும், பதக்கமும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுக்கு நீர்வேலி இராசபாதை வீதியில் உள்ள 'பொன் செல்வமஹால்' கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை பதக்கம் வழங்கும் நிகழ்வு நடைபெறும். (05)



பொலிகண்டி கந்தவனக்கடவை கல்யாண வேலவன் சுவாமி உற்சவத்தில் நேற்றைய திருவிழாவின் போது மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பறத்தில் சுவாமி வீதியுலா வருவதைக் காணலாம். (116)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.